தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 483 பிலவ வருடம், பங்குனி மாதம் 07ஆம் திகதி திங்கட்கிழமை (21.03.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 17, 0115886187 - பக்கங்கள் 12 விலை ரூ.30

சர்வதேச அழைப்புகளுக்கான தொலைபேசி கட்டணம் உயர்வு

02 பக்கம்

அரிசி விலைகளும் திகரிக்கலாம்

ஆலை உரிமையாளர்கள் தெரிவிப்பு

02 பக்கம்

விலைவாசி எகிறியது!

பால்மா, உள்நாட்டு பால்மா, தேநீர், லாவ்ஸ் சமையல் எரிவாயு, குடிநீர் போத்தல்கள், முகக்கவசம், பழங்களின் விலைகள் உயர்ந்தன

•யோ.தர்மராஜ்

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடியால் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது ஏனைய பொருட்களின் விலைகளும் அதிகரித்து வருகின்றன. அதன்படி எரிவாயு, பால்மா, உள்நாட்டு பால்மா (பெல்வத்த), தேநீர், குடிநீர், முகக்கவசம் மற்றும் பழங்கள் என பல பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இறக்கு மதி செய்யப்படும் உணவுப் பொருட்களை விடுவிப்பதற்கான டொலரை இறக்குமதியா ளர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாததமையினால், பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன. அத்தியாவசியப் பொருட்களடங்கிய கொள்கலன்கள் ஒரு மாதத்துக்கும் மேலாக விடுவிக்கப்படாது. துறைமுகத்திலேயே தேங்கிக் கிடக்கின்றன.

இவ்வாறு இந்த நிலைமை தொடர்ந்தால் பொருட்களின் விலைகள்...

02 பக்கம்

யாழ்ப்பாணம் சென்றுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்த வந்த மக்கள் வீதியில் வழிமறிக்கப்பட்டபோது பொலிஸாரின் காவலையும் மீறி பஸ்ஸிலிருந்து இறங்கிய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வீதியில் அழுது புரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எரிபொருள் வரிசையில் தொடரும் மரணங்கள் நேற்றும் முதியவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

கடவத்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் நின்றுகொண்டிருந்த ஒருவர் நேற்று (20) மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

பெட்ரோலை பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நின்ற ஒருவரே இவ்வாறு மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ராகம வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாகொல பகுதியை சேர்ந்த 70 வயதான ஒருவரே எரிபொருள் வருசையில் நின்று மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

02 பக்கம்

கமெண்ட் கந்தர்..

இப்போ வரிசையில் நிற்கவும் பயமா இருக்குதுங்கோ...'

உக்ரைனுக்கு ஆதரவாக இலங்கை குரல்கொடுக்கவேண்டும்:

மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் கூட்டாக வேண்டுகோள்

உக்ரைனுக்கு ஆதரவாக இலங்கை குரல்கொடுக்க வேண்டும் என மேற்குலக நாடுகளின் தூதுவர்களும் அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் தூதுவர்களும் அறிக்கையொன்றில் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கையில் உள்ள தூதரகங்களின் தலைவர்கள் என்ற அடிப்படையில் இலங்கை அரசாங்கம் எங்களுடன் இணைந்து உக்ரைனுக்கும் சர்வதேச சட்டத்திற்கும் ஐ.நா. பிரடனத்திற்கும் வாய்மொழி மூல ஆதரவை வழங்கவேண்டும் என தூதுவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். அவர்கள் தங்கள் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,...

02 பக்கம்

ஆளுங்கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதியான அமைச்சரொருவர் அரசின்மீது அதிருப்தியடைந்து விசேட அறிவிப்பொன்றை நாடாளுமன்றில் வெளியிடத் தயாராகி வருகிறாராம்.

இதனை அறிந்து அரச மேலிடத்து தலைவர்கள் அதிச்சியில் உள்ளனராம்.

காகித தட்டுப்பாடினால் சுற்றறிக்கைகள் இனி வட்ஸ்அப்பில்!

பல இடங்களில் மின் கட்டணப் பட்டியல் இல்லை

அதிகரித்துவரும் காகிதத் தட்டுப்பாட்டையடுத்து, திணைக்களங்களுக்கு இடையிலான தொடர்பாடல்களுக்காக சமூக ஊடகங்கள் உட்பட டிஜிட்டல் தளங்களை...

02 பக்கம்

அரசியல் கட்சிகளையும் மீறி புரட்சி ஏற்படும் - புலனாய்வுப் பிரிவினர் அரசுக்கு அறிக்கை

நாட்டின் நிலைமை மோசம் என்கிறார் ராஜித எம்.பி.

02 பக்கம்

புத்தகங்கள் அச்சிடுவதிலும் சிக்கல் நிலைமை வரலாம்

அரசாங்க அச்சகத் திணைக்களம் சுட்டிக்காட்டு

புத்தகங்களை அச்சிடுவதற்காக அரசாங்க அச்சகத் திணைக்களத்தினால் விலைமனுக் கோரப்பட்டிருந்த கடதாசி (வைட் பிரின்டிங்) உள்ளிட்ட ஆயிரம் தொன் வரையிலான மூலப்பொருட்கள், டொலர் நெருக்கடி காரணமாக அவற்றை பெற்றுக்கொள்வதில் காதாமதம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அரச நிறுவனங்களினால் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் அச்சு நடவடிக்கைகள் முழுமையாக ஸ்தம்பிதமடையும் நிலைமை உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த வருடத்துக்கான புத்தகங்களை அச்சிடும் நடவடிக்கைகளும் இதனால் சிக்கலை சந்திக்கலாம் என அரசாங்க...

02 பக்கம்

வாடிக்கையாளர்கள் வருகை குறைவால் பெரிதும் பாதிப்பு

02 பக்கம்

மரக்கறிகள் தேக்கம் விலைகளும் வீழ்ச்சி

மக்கள் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள்

இறுதிச் சீட்டிழுப்பின் வெற்றியாளருக்கு
ரூ.10,000,000/-
மாதாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.1,000,000/- × 11 மாதங்கள்
ரூ.11,000,000/-
வாராந்த வெற்றியாளர்களுக்கு தங்கப் பவுண்
நாளாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.10,000/-
மேலும் மேலும் பணம் அனுப்பி, வெல்லும் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள்
செல்லுபடியாகும் காலம் 2022 பெப்ரவரி 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை மட்டுமே.
+9477 157 6356
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

வாடிக்கையாளர்கள் வருகை...

யோ.தர்மராஜ்

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு காரணமாக போக்குவரத்துத் துறைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் நாட்டின் பல மரக்கறி சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் போக்குவரத்துகள் முற்றாக சீர்குலைந்துள்ளன. இதனால், மரக்கறிகளை பெற்றுக்கொள்வதற்கு வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோரின் வருகையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஹோட்டல்களும் மூடப்பட்டுள்ளன. இதனால் மரக்கறி கொள்வனவில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால், வியாபாரமும் குறைந்து, விலைகளும் குறைந்துள்ளன.

அதன்படி, கிலோவின் பிரகாரம் வட்டக்காய் 50 – 60 ரூபா, கரட் 100 – 110 ரூபா, வெண்டிக்காய் 40 -50 ரூபா, தக்காளி 80 – 90 ரூபா மற்றும் பிப்பிங்காய் 15 – 20 ரூபாவிற்குமே விற்பனை செய்யப்படுவதாக விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

இதேபோன்று, ஏனையவற்றின் விலைகளும் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரிசி விலைகளும்...

யோ.தர்மராஜ்

நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரித்து வரும் நிலையில், எதிர்வரும் சில நாட்களில் ஒரு கிலோ நாட்டு அரிசியின் விலை 200 ரூபாவிற்கும் மேல் அதிகரிக்கலாம் என அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது, நெல் விலை அதிகரித்துள்ளமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பெரும் போகத்தில் முன்னெடுக்கப்பட்ட விளைச்சலுக்கு இயற்கை உரங்களை பயன்படுத்தியதால் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளதாகவும் இதனால் விவசாயிகள் கையிருப்பிலுள்ள நெல்லை விற்பனை செய்யாமல் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதாகவும் அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தையில் தற்போது, ஒரு கிலோ நாட்டு நெல் 110 ரூபாவாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதுடன், அந்த விலையில் உற்பத்தி செய்யப்படும் ஒரு கிலோ அரிசியின் உற்பத்திச் செலவு 190 ரூபாவைத் தாண்டியுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் சிறுபோகத்திற்கு இரசாயன உரம் வழங்கப்படாவிட்டால் ஒரு கிலோ நெல்லின் விலை 150 ரூபாவை தாண்டும் என ஒன்றிணைந்த உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, சிறுபோகத்திற்கு பின்னர் ஒரு கிலோ அரிசியின் விலை 300 ரூபாவை தாண்டும் என அதன் தலைவர் முதித பெரேரா தெரிவித்துள்ளார்.

சர்வதேச அழைப்புகளுக்கான...

சர்வதேச தொலைபேசி அழைப்புகளுக்கான கட்டணத்தை அதிகரிப்பதற்கு தொலைபேசி நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

தொலைபேசி நிறுவனங்கள் இது தொடர்பில் அமைச்சிற்கு அறிவித்துள்ளதாக தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜயந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில், ரூபாவின் பெறுமதி 30 வீதத்தினால் வீழ்ச்சியடைந்த நிலையில் சர்வதேச அழைப்புகளுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், உள்நாட்டு அழைப்புகளுக்கான கட்டணங்கள் அல்லது இணையத்தள பாவனைக்கான கட்டணங்களை உயர்த்துவதற்கு இதுவரை எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை என தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் வரிசையில்...

எரிபொருள் வரிசையில் காத்திருந்து, மயங்கி வீழ்ந்து உயிரிழந்த இரண்டாவது நபர் இவராவார்.

நேற்று முன்தினம் (19) கண்டியில் மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்ள வரிசையில் நின்ற ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்திருந்தார்.

71 வயதான குறித்த நபரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

காகித தட்டுப்பாடினால்...

பயன்படுத்த பொது சேவைகள், மாகண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கு மின்னஞ்சல்கள், வட்ஸ்அப் மற்றும் பிற சமூக ஊடகங்களை அமைச்சு பயன்படுத்தும் என்று அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி கூறினார்.

அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளுடன் தொடர்பைப் பேணுவதற்கு, சூம் கூட்டங்கள் மற்றும் குறுந்தகவல் சேவை (எஸ்.எம்.எஸ்.) மூலம் மற்ற தொழில்நுட்பங்களையும் அவர்கள் பயன்படுத்துவார்கள் என்று அவர் கூறினார்.

அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் இருந்து தினமும் ஏராளமான அரசு கற்றறிக்கைகள் மற்றும் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. நாணய விதிதங்களின் ஏற்ற இறக்கங்களைக் கருத்தில்கொண்டு, அச்சிடும் பொருட்கள் மற்றும் இரசாயனங்களை தனியார்த்துறையினூடாகப் பெறுவது ஒரு பிரச்சினையாக மாறிவருகிறது என்று அரசாங்க அச்சுப்பொறியாளர் சங்கானி யினகே தெரிவித்தார்.

அச்சிடும் தாள் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு மேல் மாகாணத்தில் பரீட்சைகள் உட்பட பல பரீட்சைகள் ஏற்கனவே அடுத்த தவணைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அச்சிடுவதற்கான செலவு அதிகரிப்பு, அச்சடிக்கும் காகிதம் மற்றும் மை பற்றாக்குறை ஆகியவை பல அரசத்துறை நிறுவனங்களை பாதித்துள்ளன.

அவற்றில் இலங்கை மின்சார சபையும் ஒன்று. பல பகுதிகளில் மின்சார நுகர்வோருக்கு நிலுவைத் தொகை குறித்து வாய்மொழியாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டணப் பட்டியல் வழங்க காகிதம் இல்லாத நிலையில், ஒரு துண்டுக் காகிதத்தில் கட்டணம் எழுதி வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளையும்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் மக்கள் தமது கோபத்தை வெளிக்காட்டியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதி வாகனத்தில் இருந்து கை அசைத்தபோது மக்கள் "இங்போது கூபா" என கோஷமிட்டனர். நாட்டின் ஜனாதிபதி ஒருவர் தொடர்பில் மக்கள் இவ்வாறு நடந்துகொண்டது இதுவே முதல் முறை. இதுதான் மக்களிடம் இருந்து வெளிப்படும் சோபம்.

பல இடங்களில் மோதல் ஏற்பட்டது. பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இந்த நிலைமை முற்றிவருகிறது.

அரசியல் கட்சிகளையும் மீறி புரட்சி ஏற்படும் என்று புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை வழங்கியுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அந்தளவுக்கு நாட்டு மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். 450 கிராம் பால் மாவின் விலையை நேற்று 250 ரூபாவால் அதிகரித்துள்ளர். இதனால், குழந்தைகளுக்கே பாதிப்பு. பால் குடிக்கும் குழந்தைகளை அரசாங்கம் தாக்குகிறது.

எமது அரசாங்கத்தின் காலத்தில் 450 கிராம் பால் மாவின் விலை 245 ரூபாவாக இருந்தது. அந்த விலைக்கு நிகராகவே தற்போது விலை அதிகரிக்கின்றது.

அதேபோல் மருந்துகளின் விலைகளும் பெருமளவில் அதிகரித்துள்ளன. மக்களுக்கு உணவை போலவே வாழ்வதற்கு தேவையான மற்றைய பொருள் மருந்து. இதனால், மருந்துகளின் விலைகளை அதிகரித்தமை மனித நேயமற்ற செயல்.

அரசாங்கம் தலையிட்டு மருந்துகளை மானிய விலையில் வழங்க வேண்டும். இதனை விட மருந்து தட்டுப்பாடு என்பது மிகவும் மோசமான நிலைமை. அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தினும் சுமார் 250 மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சந்தையில் செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளனர் என ஜனாதிபதி கூறுகிறார். அப்படியானால், அவரது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தில் எப்படி மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்படும். மருந்துக்கு பொறுப்பான அமைச்சர் இந்த செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தினாரா ?.

துறை சம்பந்தப்பட்ட விடயங்களை அறியாது அமைச்சர்கள் கருத்து வெளியிடுகின்றனர். இதனால், பொது மக்களின் கோபம் மேலும் அதிகரிக்கும். தற்போது விலை கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டிருந்தாலும் எமது அரசாங்கத்தின் கீழ் நாங்கள் விலைக் கட்டுப்பாடுகளை மீண்டும் கொண்டு வருவோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்து ஒரு வாரத்தில் மருந்துகளுக்கு விலை கட்டுப்பாடுகளை கொண்டு வருவோம் எனவும் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

விலைவாசி எகிறியது!...

மேலும் அதிகரிக்கும் என இறக்குமதியாளர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தனர். இந்த நிலையில், தற்போது நாட்டில் பல்வேறு பொருட்களின் விலைகள் எதிர்பாராதவிதமாக அதிகரித்துள்ளன.

பால்மா – தேநீர் விலை அதிகரிப்பு

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதால் பால்மாவின் விலையை உயர்த்துவதற்கு தீர்மானித்ததாக பால் மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளன்.

அதன்படி, 400 கிராம் பால்மாவின் விலையை 250 ரூபாவினாலும் ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலையை 400 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த விலை அதிகரிப்புக்கு அமைய இதுவரை 540 ரூபாவிற்கு சந்தையில் விற்பனை செய்யப்பட்ட 400 கிராம் பால்மாவின் விலை 790 ரூபாவாகவும் இதுவரை 1,345 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலை 1,945 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த டிசம்பர் 30ஆம் திகதி 400 கிலோகிராம் பால்மா 60 ரூபாவினாலும் ஒரு கிலோ கிராம் பால்மா 150 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டிருந்தன. அதன்படி, இரண்டரை மாதத்திற்குள் 400 கிராம் பால்மா 310 ரூபாவினாலும் ஒரு கிலோ பால்மா 750 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், உள்நாட்டு பால்மாவின் விலையும் அறிவிக்கப்படாது அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிந்தது. அதன்படி, 520 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட உள்நாட்டு பால்மா (பெலவத்த) தற்போது, 625 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. அவ்வாறாயின், 400 கிராம் உள்நாட்டு பால்மா 105 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பால்மாவின் விலை அதிகரிப்பையடுத்து, தேநீரின் (டீ) விலை 100 ரூபாவாக அதிகரித்துள்ளதாக ஹோட்டல் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த விலையை ஒரு வருடத்திற்கு திருத்தம் செய்யப்போவதில்லை என்றாலும், பால்மாவின் விலை குறைவடைந்தால் மாத்திரம் விலையை குறைப்பதற்கும் தீர்மானித்திருப்பதாக அதன் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இதேவேளை, டொலரின் பெறுமதி அதிகரித்ததை அடுத்து, அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளபோதும் மில்கோ நிறுவனத்தின் எந்த உற்பத்திகளினதும் விலை அதிகரிக்கப்படமாட்டாது. அத்துடன் பால் மா உற்பத்தியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அடுத்த மாதம் ஆரம்பம் முதல் பால்மா விநியோகிக்கப்படும் என மில்கோ நிறுவனத்தின் தலைவர் ரேணுக பெரேரா தெரிவித்தார்.

பால்மா – திரவப் பால் தட்டுப்பாடு

பால்மாவின் விலை எதிர்பாராத விதத்தில் அதிகரித்திருந்தாலும் சந்தையில் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக பால்மா விற்கான தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்தத் தட்டுப்பாடினால் கறுப்பு சந்தையில் பால்மா அதிக விலைக்கும் விற்பனை செய்யப்பட்டன.

இந்த நிலையில், பாலமாவின் விலையை அதிகரித்து அதன் பயன்பாட்டை குறைத்து, திரவப் பாலின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அதிகாரிகள் தெரிவித்தாலும், திரவப் பாலுக்கும் தற்போது பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர். கடந்த இருவாரங்களுக்கு மேலாக சந்தையில் திரவப் பாலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எரிவாயு விலை அதிகரிப்பு

லாவல் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக லாவல் சமையல் எரிவாயு சிலிண்டர் நிறுவன விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, 12.5 கிலோ கிராம் லாவல் சமையல் எரிவாயுவின் விலை 4,199 ரூபாவாகவும் 5 கிலோ கிராம் எரிவாயுவின் விலை 1,680 ரூபாவாகவும் 2 கிலோ கிராம் எரிவாயுவின் விலை 672 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், 37 கிலோ கிராம் எரிவாயுவின் விலை 12,300 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஆகஸ்ட் மாதம் 12.5 கிலோகிராம் எரிவாயு 363 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு 1,856 ரூபாவாகவும் கடந்த ஒக்டோபர் மாதம் 984 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு 2,840 ரூபாவாகவும் காணப்பட்ட நிலையில், தற்போது 1,359 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு 4,199 ரூபாவாக காணப்படுகின்றது.

குடிநீர் போத்தலின் விலை அதிகரிப்பு

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் குடிநீர் போத்தல்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. அதன்படி, 90 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் குடிநீர் போத்தலின் விலை 30 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு, 120 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், 150 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட 2 லீற்றர் குடிநீர் போத்தல் 60 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு, 210 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றன. அரை லீற்றர் குடிநீர் போத்தல் 50 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

பழங்களின் விலை அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் பழங்கள் உள்ளிட்ட பல பொருட்களுக்கான பண்ட வரி அதிகரிக்கப்பட்டமையினால் தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படும் பழங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, 40 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட பச்சை நிற அப்பில் தற்போது 90 ரூபாவிற்கும் 50 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட சிவப்பு நிற அப்பில் 130 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும், 80 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட பச்சை நிற அப்பில் 170 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுவதாக விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முகக்கவசத்தின் விலை அதிகரிப்பு

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் முகக்கவசத்தின் விலையை 30 வீதத்தால் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை முகக்கவச உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி நாளுக்குநாள் அதிகரித்துச் செல்வதாலும் முகக்கவச உற்பத்தியாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் அனைத்து வகையான முகக்கவசங்களுக்கு தேவையான மூலப் பொருட்களை பெற்றுக்கொள்வதில் பொலர் தட்டுப்பாடு பெரும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது.

இதனால், முகக்கவசத்தின் விலையை 30 வீதத்தால் அதிகரிப்பதுடன் அதனை இன்று (21 முதல் அமுல்படுத்துவதாகவும் முகக்கவசத்திற்கு விலை கட்டுப்பாட்டையும் விதிக்க முடியாது எனவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

புத்தகங்கள்...

அச்சகத்தினைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்க அச்சகத் திணைக்களத்தினால விலை மனுக் கோரப்பட்டிருந்த மூலப்பொருட்களை நிர்ணயிக்கப்பட்ட விலையில் விநியோகிக்க, விநியோகஸ்தர்கள் மறுப்பு தெரிவிப்பதால் இந்த சிக்கலுநிலை உருவாகியுள்ளதாக அச்சுத் திணைக்களத் தலைவர் கங்கானி கல்பனா யினகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதால் அதனை ஈடு செய்யும் வகையில் இதற்கு முன்னரே விலைமனுக் கோரப்பட்ட பொருட்களுக்கும் பணம் செலுத்துமாறு விநியோகஸ்தர்கள் கோருகிறார்கள்.

இது தொடர்பில் திறைசேரியிடம் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். புத்தகம் மற்றும் காகிதாதிகளை அச்சிடுவதற்காக விலைமனுக் கோரப்பட்ட வர்னாப் பூச்சின் மற்றும் பிளேட் போன்றவற்றின் விநியோக நடவடிக்கைகளிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தற்போது இருப்பில் இருக்கும் கடதாசி அளவை பயன்படுத்தி அச்சிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, ஒருசில அரச நிறுவனங்களில் காகிதாதிகள் வரையறுக்கப்பட்டளவிலேயே இருப்பில் இருப்பதால், அவற்றை தற்போதைய நிலைமையில் பயன்படுத்துமாறும் அத்தியாவசியமாக காகிதாதிகளை மாத்திரம் கோருமாறும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனுக்கு ஆதரவாக...

இறைமையுள்ள ஜனநாயக நாடான உக்ரைன் மீதான ரஷ்யாவின் துன்பட்டபாத நியாயமற்ற சட்டவிரோத படையெடுப்பை நாங்கள் மிகவும் கடுமையாக கண்டிக்கின்றோம்.

இந்த மூர்க்கத்தனமான தாக்குதல் ஐ.நா. சாசனம் உட்பட சர்வதேச சட்டத்தை முற்றிலும் மீறும் செயலாகும்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் மனிதாபிமான பேரழிவை ஏற்படுத்தியுள்ளதை உலகம் அச்சத்துடன் பார்த்துவண்ணமுள்ளது.

ரஷ்யா பொதுமக்கள் வாழும் பகுதிகள் கட்டமைப்புகள் மீதான தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளதன் காரணமாக பொதுமக்களுக்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

பெண்கள், சிறுந்தைகள், முதியவர்கள் உட்பட மில்லியன் கணக்கான மக்கள் அயல்நாடுகளிற்கு அகதிகளாக தப்பிவெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதன் காரணமாக கடந்த 70 வருடங்களில் மிகவேகமாக அகதிகளாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ரஷ்யாவின் படையெடுப்பு என்பது அமைதியான நாட்டின் மீதான துன்பட்டபாத நியாயமற்ற நடவடிக்கையாகும்.

உலகில் சமாதானம், அமைதி என்பவற்றிற்கான அடித்தளமாக உள்ள இறைமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டிற்கு ரஷ்யா அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சாசனம் கடந்த காலங்களில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும், அது அமைதி, பாதுகாப்பு, அபிவிருத்தி, நீதி, சர்வதேச சட்டங்கள் மற்றும் மனித உரிமைகளின் பக்கம் உறுதியாக நின்றுள்ளது. சர்வதேச சமூகம் உக்ரைனிலும் அனைத்து மனித குலத்திற்கும் இந்த விழுமியங்கள் உறுதிப்படுத்தப்படுவதை தனது அதிகாரத்தை பயன்படுத்தி உறுதி செய்ய வேண்டும் என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கைக்கு நாங்கள் முழுமையான ஆதரவை வெளியிடுகின்றோம்.

உக்ரைனுக்கான மிகப்பெரும் ஆதரவு காரணமாக ரஷ்யா தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்ய அரசாங்கத்தின் தாக்குதலை கண்டிப்பதில் நாங்கள் ஐக்கியப்பட்டுள்ளோம்.

மார்ச் இரண்டாம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் 141 நாடுகள் ரஷ்யாவை கண்டிக்கும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்கு எித்தன.

இது ரஷ்யா சர்வதேச சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளதை வெளிப்படுத்தி யுள்ளது.

ரஷ்யாவிற்கு கடும் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக உக்ரைனிற்கு ஆதரவளிக்கும் நாடுகள் முன்னர் ஒருபோதும் இடம்பெறாதவகையில் ரஷ்யாவிற்கு எதிராக இலக்குவைக்கப்பட்ட தடைகளை விதித்துள்ளன.

உக்ரைனிற்கு எதிரான தாக்குதல்களை தொடரும் ரஷ்யாவின் திறனை குறைப்பதும், உக்ரைனிற்கு எதிரான விரோதப்போக்கிலிருந்து ரஷ்யாவை பின்வாங்க செய்வதற்கான அழுத்தத்தை கொடுப்பதுமே இதன் நோக்கம்.

வங்கிகள் முதல் எண்ணெய் நிறுவனங்கள், காப்புந்தாட்ட கழகங்கள் வரை புட்டினின் நடவடிக்கைகளிற்கு விளைவுகள் இருக்கும் என்பதையும் அவரது அரசாங்கம் இனிமேல் சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதியாக விளங்க முடியாது என்பதையும் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

உக்ரைனில் சகாக்களும் நண்பர்களும் குறிப்பிடத்தக்க அளவு மனிதபிமான மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கியுள்ளன. பல நாடுகள் உக்ரைனிலிருந்து தப்பிவருபவர்களிற்கு தங்கள் எல்லைகளை திறந்துள்ளன.

தனது படையெடுப்பை நியாயப்படுத்தும் விதத்தில் ரஷ்யா பொய்யான கதைகளை வெளியிடுகின்றது.

ரஷ்யா அதன் படையெடுப்பை நியாயப்படுத்தும் ஒரு போலியான முயற்சியில் உக்ரைன் அரசாங்கத்திற்கு எதிரான போலியான பிரசாரத்தை முன்னெடுத்துள்ளது.

அதன் ஜனநாயக அயல்நாடுகளை அழிக்க நினைக்கும் ரஷ்யாவின் பிரசாரம் எந்த நியாயமும் இல்லாதது.

நேட்டோ ஆத்திரமூட்டுகின்றது என ரஷ்யா பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றது. நேட்டோ எப்போதும் ஒரு தற்பாதுகாப்பு கூட்டணியாகவே இருந்துவந்துள்ளது. அதனால் ரஷ்யாவிற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை.

நாங்கள் இலங்கை உக்ரைனிற்கும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கும் ஆதரவளிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம். இலங்கையில் உள்ள துதுவரங்களின் தலைவர்கள் என்ற அடிப்படையில் இலங்கை அரசாங்கம் உக்ரைனிற்கும் ஐ.நா. சாசனம் சர்வதேச சட்டத்திற்குமான குரல்களுடன் இலங்கை இணைந்துகொள்ள வேண்டும் என நாங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

ரஷ்யா தனது மோதல்களை உடனடியாக நிறுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுப்பதில் இலங்கை எங்களுடன் இணைந்து கொள்ள வேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

உக்ரைனின் இறைமை மீண்டும் நிலைநாட்டப்படுவதை உறுதிசெய்வதற்காக நாங்கள் உலகெங்கிலும் உள்ள எங்கள் சகாக்கள், நண்பர்களுடன் இணைந்து பாடுபடுவோம்.

இன்றைய ராசி பலன்

21.03.2022 திங்கள் பங்குனி 7

ஜோதிடர் நற்பவி

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

நட்சத்திரம்: சுவாதி
இரவு 9.31 வரை
விசாகம் இரவு 9.31 - 22.03.2022 இரவு 8.14 வரை
யோகம்: வியாகாதம்
மாலை 3.55 வரை
ஹர்ஷணம்
மாலை 3.55 - 22.03.2022
பிற்பகல் 1.10 வரை
திதி: அமர பட்ச சதுர்த்தி
காலை 8.20 - 22.03.2022 காலை 6.24 வரை
முற்கரணம்: பத்திரை
காலை 8.20 வரை
பிற்கரணம்: பவம்
காலை 8.20 - இரவு 7.23

சுப நேரங்கள்
காலை 6.14 - 7.15
மாலை 4.50 - 6.21
அசுப நேரங்கள்
ராகு காலம்
காலை 7.45 - 9.16
குளிகை காலம்
பிற்பகல் 1.49 - 3.20
எமகண்ட காலம்
காலை 10.47 - பி.ப 12.18
தூர் முகூர்த்தம்
பிற்பகல் 12.42 -1.30
மாலை 3.07 - 3.56

லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

மேஷம்: காணி/வீடு/சொத்து வர்த்தக தொழிலில் நல்ல நிலை ஏற்படலாம். புதிய முடிவுகளை அவதானமாக எடுப்பது நல்லது. இல்லத்தில் மகிழ்ச்சி நிலவும். பணிகளும் சிறப்பாக நிறைவேற்றப்படலாம்.

ரிஷபம்: அவசரமற்ற மற்றும் அவசியமற்ற பயணங்களை தவிர்ப்பது நல்லது. வருவாய்க்கான புதிய நல்ல நிலை தோன்றலாம். வேலைகளில் சில தொழில்நுட்ப பிரச்சினைகள் ஏற்படலாம். உங்கள் மீதான எதிர்ப்பு விடயங்களில் கவனம் தேவைப்படலாம். இறைதியானம் நன்மை.

மிதுனம்: வேலைத்தள பணிகளில் உங்களுடன் இணைந்து பணிசெய்பவர்களின் ஆலோசனை நன்மை தரலாம். கடன் பரிவர்த்தனைகளில் கவனம் தேவைப்படலாம். உறவுகளுடன் சிறிய மனக்கவலை ஏற்படலாம். தகவல் தொடர்புதிறன் மேம்படும். எதிர்காலம் பற்றிய கவலை அதிகரிக்கலாம். இறைவணக்கம் தேவை.

கடகம்: வணிக செயல்பாடுகளில் அனுபவசாலிகளின் ஆலோசனைகளால் நன்மை கிடைக்கலாம். ஆடம்பர செலவுகளை தவிர்ப்பது நல்லது. ஆன்மீக செயல்களில் கலந்து கொள்ளும் நிலை உண்டாகலாம். பணியிடங்களில் சிறப்பான ஈடுபாடு தேவைப்படலாம்.

சிம்மம்: சில நல்ல நட்பால் உங்கள் ஆளுமை பிம்பம் மேம்படலாம். பண விடயங்களில் ஜாதக கிரக ஒத்துழைப்பால் நல்ல நிலை தோன்றலாம். தொழில் பணிகளில் உங்கள் மேலதிக ஆற்றலால் நன்மை அதிகரிக்கலாம். வணிகத்தில் உங்கள் வளங்களை நல்ல முறையில் பயன்படுத்தும் நிலை உண்டாகலாம்.

கன்னி: பணிக்கான நேர்முகத் தேர்வுகளில் வெற்றி கிடைக்கலாம். பயணங்களில் கவனம் தேவைப்படலாம். நண்பர்களின் ஆதரவு பெருகும். மற்றவர்களிடம் கண்ணியத்துடன் இருப்பது நல்லது. பிறரை நம்பி உங்கள் வேலைகளை ஒப்படைக்க வேண்டாம்.

துலாம்: வேலைத்தளத்தில் உங்களுக்கு தலைமைத்துவம் ஏற்படலாம். நெடுங்காலமாக வரவேண்டிய கொடுத்த கடன் திரும்ப பெறும் நிலை உண்டாகலாம். பங்குதாரர் தொழிலில் தொழிலதிபர்கள் தங்கள் பங்குகளை விற்று, இலாபங்களை அடையலாம். மனதில் திருப்தி உண்டாகலாம்.

விருச்சிகம்: தேவையற்ற வாக்குவாதம் தவிர்ப்பது நன்மை. படைப்பாற்றல் திறமைகளை சரியான வழியில் பயன்படுத்தி நன்மை பெறலாம். வாழ்க்கைத்துணையுடன் அனுசரிப்பு தேவைப்படலாம். தேவையற்ற சிலரின் சகவாத்தை தவிர்ப்பது நல்லது.

தனுசு: ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட வேலைகளில் ஆர்வம் அதிகரிக்கலாம். பணியிடங்களில் விவேகத்துடன் இருந்து எதிர்ப்புகளை நீக்கிக் கொள்ளலாம். வருவாய் மேம்படும். தொழில் கடன் கிடைக்கப் பெறலாம். புதிய பணிக்கு செல்லும் எண்ணம் ஏற்படலாம்.

மகரம்: பணிகளில் சிறப்பாக செயல்படும் நிலைமை ஏற்படலாம். கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கு கல்விநிறுவனங்கள் மூமாக பணி வாய்ப்பு கிடைக்கலாம். பிறரை நம்ப வைக்கும் உங்கள் மதிப்புமிக்க திறனால் சில பிரச்சினைகளை நீக்கிக் கொள்ளலாம்.

கும்பம்: சிலருக்கு வீடு வாங்கும் முயற்சியில் உற்சாகம் அதிகரிக்கலாம். பணியிடங்களில் மேலதிகாரிகளின் ஆதரவு குறையலாம். குடும்பத்தில் சிறிய கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். தூரப் பயணம் உண்டாகலாம். பணிகளில் உங்கள் உழைப்பின் பலன் வேறு ஒருவருக்கு கிடைக்கலாம்.

மீனம்: பிறரின் உணர்வுகளை மதித்து நடப்பது நல்லது. கடன் கொடுப்பதை இன்று தவிர்ப்பது நல்லது. கோபம் மற்றும் எரிச்சலை குறைத்து கொள்ள வேண்டும். காலில் சிறிய வலி உண்டாகலாம். வணிகத்தில் இலாபம் ஈட்ட நேர வழி தவறினால் பிரச்சினைகள் உண்டாகலாம். இறைவணக்கம் தேவை. சந்திராஷ்டமம்: உத்தரட்டாதி நட்சத்திரத்திற்கு மாலை 3.49 வரை ரேவதி நட்சத்திரத்திற்கு மாலை 3.49 - 22.03.2022 பிற்பகல் 2.33 வரை

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் 80 வீதமான கட்டடங்களை புனரமைத்து பயன்படுத்தும் சாத்தியம்

பிரதமரின் விஜயத்தின்போது விசேட கவனம்

யுத்தம் காரணமாக மூடப்பட்ட இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (20) காலை கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

1950 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை 1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடனான யுத்தம் காரணமாக மூடப்பட்டது.

இத்தொழிற்சாலை 728 ஏக்கர் பரப்பளவைக் கொண்டிருந்தாலும், தற்போது அதன் பெரும்பாலான பகுதிகள் குடியிருப்பு பகுதிகளாக மாறியுள்ளன.

2021 பெப்ரவரி 08 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் பயன்படுத்தக்கூடிய கட்டடங்களை தவிர ஏனைய கட்டடங்களை இடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எனினும் 80 வீதமான கட்டடங்களை புனரமைத்து பயன்படுத்த முடியும் என பிரதமரின் இந்த கண்காணிப்பு விஜயத்தின் போது தெரியவந்துள்ளது.

அதற்கமைய காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை புனரமைக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

பிரதமரின் இந்த கண்காணிப்பு விஜயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் காமினி ஏக்கநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கண்காணிப்பு விஜயத்தை தொடர்ந்து பிரதமர் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் பிரதம குருக்கள், ரட்னசபாபதி குருக்கள் தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

ரட்னசபாபதி குருக்கள் இதன் போது பிரதமருக்கு நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

பிரதமருடனான வழிபாட்டு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

பொய்கள் கோலோச்சும் யுகத்தை உண்மையின் பெயரால் தோற்கடிப்போம்

எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

இன்று பொய்கள் மேலோங்கி வருவதாகவும், அதன் விளைவாக நாடு தீவிர ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஸ்ரீ சம்புத்த சாசனத்தின் நிலைத்தன்மையும் ஆயிரக்கணக்கான பௌத்தர்களால் போற்றப்படுவதுமான புனித வழிபாட்டை கருத்திற் கொண்டு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் முன்னணிப் பங்களிப்போடு பத்தாவது கட்டமாக கட்டும்பொல, பன்னல,



நாலவலான பல்வலகும்புர ஸ்ரீ விஜயராம விகாரையின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சைத்திய கோபுர திறப்பு விழா எதிர்க்கட்சித் தலைவரின் தலைமையில் நேற்று (20) இடம்பெற்றது.

இதன்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொய்கள், கட்டுக்கதைகள் மூலம் நாட்டை நடத்தும் அரசாங்கம் நாட்டை பொய்யாக்கி மக்களை வீதியில் தள்ளியுள்ளதாகவும், வரிசைகள் யுகத்தில் நிற்கும் மக்கள் மிகவும் ஆதரவற்ற நிலையில் இருக்கின்றனர்.

தொலைநோக்கு உறுதிப்பாடுகள் காரணமாக இன்று தரிசு நாடுகள் ஆபிரிக்காவின் சிங்கப்பூர் ஆகிவிட்டதாகவும், நச்சு இரசாயன குண்டுகளால் அழிந்த வியட்நாம் விரைவான வளர்ச்சியை நோக்கி நகர்ந்து வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இத்தனைக்கும் மத்தியில் இலங்கை நாளுக்குநாள் சீரழிந்து வருவதாகவும் தெரிவித்தார்.

'அருண' பத்திரிகையின் செய்தி ஆசிரியருக்கு கொலை மிரட்டல்

(ஹேமந்த லியனபத்திரன)

'அருண' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் சமிந்த சேனாரத்னவுக்கு தொலைபேசி அழைப்பினூடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது. இதுதொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

செய்தி ஆசிரியர் சமிந்த சேனாரத்ன, கடந்த 18ஆம் திகதி அலுவலகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தபோது 0712293495 மற்றும் 00916282807305 ஆகிய இலக்கங்களினூடாக வந்த அழைப்புகளில் இவ்வாறு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அழைப்புகளில், 'எமது எஸ்.பீக்கு சேறு பூசும் வகையில் செயற்படும் உமக்கு, மூன்று கிழமைகளுக்கு அதிகம் உயிர்வாழ இடமளிக்க போவதில்லை" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அதேபோன்று அவர் வசிக்கும் பிரதேசம் மற்றும் வீடு என்பவற்றை கண்டுபிடித்துள்ளதாகவும் அந்த வீட்டை ஒதுக்கி வைத்துக்கொள்ளுமாறும், புதுவருடத்தை கொண்டாட இடமளிக்க போதில்லை" எனவும் அந்த அழைப்பை எடுத்த நபர் குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு எந்த அடிப்படையில் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் விசாரணை செய்யுமாறும், அதேபோன்று தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளின் உயிரை பாதுகாக்குமாறும் செய்தி ஆசிரியர் சமிந்த சேனாரத்ன பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

இராணுவத்திடம் உயர் கல்வியை ஒப்படைக்க இடமளிக்க முடியாது

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் திட்டவட்டம்

(கண்டி நிருபர்)

பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு உயர் கல்வியை வழங்குவதில் பிரச்சினை இல்லை. ஆனால் இராணுவத்திடம் உயர் கல்வியை ஒப்படைப்பதே பிரச்சினை என பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அனுராதா விதாரன தெரிவித்தார்.

பேராதனை, கலஹா சந்தியில் நேற்று முன்தினம்(19) இடம்பெற்ற மாணவர் ஆர்ப்பாட்டம் ஒன்றை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்னைய ஆட்சிகளின்போது பல சந்தர்ப்பங்களில் கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலம் கொண்டுவர முற்பட்டு அவை பலத்த எதிர்ப்பை அடுத்து பின்தள்ளப்பட்டது. அதே சட்டமூலத்தில் சில சொற்பிரயோகங்களை மட்டும் உட்படுத்தி அல்லது மாற்றம் செய்து பழையதையே கொண்டு வர முயற்சிக்கும் ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிகிறோம். எனவே அதனை எதிர்த்தே இவ் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளோம்.

பொதுவாக பல்கலைக்கழகங்களை மேற்பார்வை செய்வது, திட்டம் வகுப்பது கொள்கை அமுலாக்கம் செய்வது போன்ற பல விடயங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வசம் ஒப்படைக்கப்படுகிறது. பேராசிரியர்கள் மூலம் அவை மேற்பார்வை செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலத்தின் ஊடாக அவை ஒரு சபையிடம் ஒப்படைக்கப்படுகிறது. அச்சபை அங்கத்தவர்களாக இராணுவத்தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் போன்ற இராணுவ தரப்பை மட்டும் மையமாக வைத்து சபை அமைக்கப்படுகிறது. சகல பல்கலைக்கழக நடவடிக்கைகளும் காலப் போக்கில் அச்சபையிடம் ஒப்படைக்கப்படலாம். அதே நேரம் இச்சட்ட மூலத்தின் கீழ் இன்னும் பல பல்கலைக்கழகங்கள் உருவாகும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இதன் கீழ் வரலாம். அப்படியாயின், யாவும் பணத்திற்கு விற்பனை செய்யும் நிலை ஏற்படும். இவ்வளவு காலமும் பாதுகாத்து வந்த இலவசக்கல்வி பறிபோகலாம்.

பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு உயர்கல்வியை வழங்குவதில் எமக்கு பிரச்சினை இல்லை. ஆனால் இராணுவத்திடம் கல்வியை ஒப்படைப்பதே பிரச்சினை. அத்துடன் நாடு தற்போது சுமூக நிலைக்கு வந்துள்ள போதும் இன்னும் எமது கல்விப் பீடங்கள் திறக்கப்படவில்லை. சுகாதார வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டு அவை உடன் திறக்கப்பட வேண்டும் என்றார்.

எரிவாயு வரிசையிலிருந்தவர்களுக்கு ஐஸ்பழம் – குடிநீர் பகிர்ந்தளித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

நவகமுவ பிரதேசத்தில் அமைந்துள்ள சமையல் எரிவாயு பகிர்ந்தளிக்கும் பிரிவில், எரிவாயு பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் மணிக்கணக்காக காத்திருந்த நபர்களின் களைப்பை போக்குவதற்காக ஐஸ்பழம் மற்றும் குடிநீர் போத்தல்களை பெற்றுக்கொடுக்க நவகமுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ருவன் லக்ஷ்மன் டி சில்வா நடவடிக்கை எடுத்துள்ளார்.

வரிசையில் காத்திருந்த சகலருக்கும் தனது தனிச் செலவில் ஐஸ்பழம்

மற்றும் குடிநீர் பெற்றுக்கொடுக்க பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த இடத்தில் 300இற்குக் அதிகமானோர் இருந்துள்ளதுடன் இதன் காரணமாக வாகன நெரிசலையும் அவதானிக்கக் கூடியதாக இருந்துள்ளது.

கோடியக்கரையில் கரையொதுங்கிய ஆளில்லா மர்மப் படகு

சுங்கத்துறையினர் விசாரணை

(மன்னார் நகர் நிருபர்)

நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த கோடியக்கரை மீன்பிடித்துறைமுகத்தில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் காத்தான் ஓடை என்ற கடற்கரை பகுதியில் இலங்கையைச் சேர்ந்த கண்ணாடி இழை படகு ஒன்று நேற்று (20) காலை கரையொதுங்கியுள்ளது.

மீனவர்கள் வழங்கிய தகவல்களுக்கு அமைவாக, கோடியக்கரை சுங்கத்துறை அதிகாரி கன்னாணிப்பாளர் ஸ்டெல்லா மேரி உத்தரவின்பேரில் சுங்கத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று படகை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டுள்ளனர். குறித்த படகில் (OFRP-A-0851 KCH)என்ற இலக்கம் காணப்படுகின்றது.

படகு மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்த படகா? அல்லது கடத்தல் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் படகா? இப் படகில் யாரும் வந்தனரா? என்பது குறித்தும் விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர்.

மேலும், கியு பிரான்ஞ் பொலிஸார் மற்றும் கடலோர பாதுகாப்பு குழுமத்தினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மார்ச் 21ஆம் திகதி, திங்கட்கிழமை

திண்டாடும் மக்கள்!

இலங்கையில் நிலவும் மாபெரும் பொருளாதார வீழ்ச்சிக்கு இன, மத உணர்வுகளைத் தூண்டும் அரசின் கொள்கையும் ஒரு காரணம் என்று இந்தியாவின் பொருளாதார நிபுணர் ஆனந்த் ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார். இந்த பொருளாதார சரிவின் இன்னொரு கோணத்தை அவர் விவரித்திருக்கிறார்.

இலங்கையில் தற்போது வரலாற்றில் இல்லாத அளவிற்கு மிக கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. இந்த பொருளாதார நெருக்கடி பற்றி எளிதாக சொல்ல வேண்டுமென்றால் பின்வருமாறு இரண்டு வரிகளில் சொல்லிவிடலாம். டொலருக்கு நிகரான இந்திய ரூபா மதிப்பு 75.87. தற்போது போர் காரணமாக பொருளாதாரத் தடையை எதிர்கொண்டிருக்கும் ரஷ்யாவின் ரூபேல் மதிப்பு 104. ஆனால், எந்தப் போரையும், உள்நாட்டு மோதலையும் எதிர்கொள்ளாத இலங்கை ரூபாவின் மதிப்பு 300ஐ எட்டியுள்ளது.

மிக மோசமான நிலையில் இலங்கை. உணவுக்கு அல்லாடும் மக்கள். சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்தும் அவலநிலையில் அரசு, மிக மோசமான நிலையில் இலங்கை. மிக மோசமான வீழ்ச்சியை இலங்கை பண மதிப்பு சந்தித்துள்ளது.

அந்தளவிற்கு இலங்கையின் பொருளாதாரம் கடுமையாக வீழ்ந்துள்ளது. 1970இல் இலங்கையில் நிலவிய பஞ்சத்தை விட மிக மோசமான பஞ்சமாக இது பார்க்கப்படுகிறது.

இலங்கை பொருளாதாரம் கொரோனாவிற்கு பின்பாகத்தான் வீழ்ச்சி அடைகிறது என்றும் கூட சொல்ல முடியாது. ஏனென்றால், கடந்த 4 வருடமாகவே - அதாவது, கொரோனாவிற்கு முன்பே பொருளாதாரம் கொஞ்சம் கொஞ்சமாக வீழ்ச்சியை நோக்கித்தான் சென்றுகொண்டு இருந்தது. முக்கியமாக சீனாவிடம் வங்கிய கடன், சீனாவின் பல்வேறு நிதி உதவிகள், அதற்கான வட்டி எல்லாமே இலங்கையின் பொருளாதாரத்தை முடக்கி போட்டது. அதன்பின் வந்த கொரோனா காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பாதாளத்திற்கு சென்றது.

முக்கியமாக கொரோனா சமயத்தில் இலங்கையின் பொருளாதாரம் படுவீழ்ச்சி அடைந்தது. உலக நாடுகள் பல பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்ட நிலையில், சுற்றுலாத்துறையை கணிசமாக நம்பியிருக்கும் இலங்கை படுமோசமான வீழ்ச்சியை சந்தித்தது. அதிலும் டொலருக்கு நிகரான இலங்கையின் ரூபாயின் மதிப்பு நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைந்துகொண்டே சென்றது.

மத்திய வங்கி இதை சரிபடுத்த பல்வேறு திட்டங்களை அறிவித்தும் எதுவும் நாட்டுக்கு உதவிக்கரமாக அமையவில்லை. இலங்கை வரலாற்றில் கடந்த 75 வருடங்களில் இல்லாத நிலைக்கு பொருளாதாரம் நலிவடைந்துள்ளது. இதனால் ஒரே வாரத்தில் இரண்டு முறை சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை உதவி கேட்டு கையேந்தும் நிலைக்கு சென்றுவிட்டது. ரஷ்ய போர் காரணமாக இன்னொரு பக்கம் இலங்கையில் பெற்றோல், டீசல் விலை உச்சத்தைத் தொட்டுள்ளது.

இந்த விலைவாசி உயர்வு காரணமாகவும், வேலைவாய்ப்பு இன்மையாலும் மக்கள் கடுமையான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில்தான் பொருளாதார நிபுணரும், எழுத்தாளருமான ஆனந்த் ஸ்ரீனிவாசன் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையின் இன்னொரு கோணத்தை அணுகியிருக்கிறார்.

அதாவது, பொருளாதார சரிவு என்பதையும் தாண்டி, அந்த நாட்டு அரசின் கொள்கை குறித்தும் அவர் விமர்சனம் செய்துள்ளார். பொருளாதாரம் மீது கவனம் செலுத்தாமல் மத, இனவாதம் மீது கவனம் செலுத்தியதே இந்த சரிவிற்கு முக்கிய காரணம் என்று அவர் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்துள்ள ட்விட்டில், வெகுஜனத்தின் வாழ்வாதார பொருளாதார மேம்பாடுகளை விட்டு, இன, மத உணர்வு தூண்டுதலை மட்டுமே பிரதானமென ஓர் அரசு இயங்கினால் இந்நிலையை தவிர்க்கவே முடியாது என்பதற்கு இலங்கையின் தற்போதைய சூழல் ஓர் எச்சரிக்கை என்று குறிப்பிட்டிருக்கிறார். இலங்கையில் உள்நாட்டுப் போர் நிலவியபோதும், அதற்கு பின்பாகவும் பெரும்பாலும் இனவாதம்தான் அதிக கவனம் பெற்றது. மக்கள் பிரச்சினைகளை பிரசாரத்தில் தலைவர்கள் பேசவே இல்லை.

ராஜபக்ஷ குடும்பம் ஆட்சிக்கு வர இனவாத ரீதியான பிரசாரங்கள் காரணமாக இருந்தன. மக்களும் பொருளாதாரத் திட்டங்களை பற்றி யோசிக்காமல் அங்கு இனவாதத்திற்கு வாக்களித்ததன் விளைவு, அவர்கள் ரொட்டிக்கும், தக்காளிக்கும் கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இதைத்தான் ஆனந்த் ஸ்ரீனிவாசன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

எரிபொருள் வரிசையில் நின்ற 70 வயதையொத்த இரண்டு முதியவர்கள் அடுத்தடுத்து உயிரிழந்துள்ளார்கள். 70 வயதுடைய இருவர் இன்னமும் உழைத்துச் சாப்பிட வேண்டிய நிலையில்தான் இருக்கிறது பொருளாதாரம். இப்போதும் கூட இந்தியா இலங்கைக்கு வழங்கியுள்ள உதவி தற்காலிக நிவாரணம்தான். மே மாதமளவில் இலங்கையின் நிலைமை மேலும் மோசமடையப்போவதாகவே எதிர்வுகூறல்கள் சொல்கின்றன. பொருளாதார நிபுணர் ஆனந்த் ஸ்ரீனிவாசன் கூறுவதும் ஒரு பக்கம் நியாயமானதாகவே இருக்கிறது. இந்த நிலைமை தொடர்ந்தால் மக்கள் பாடு திண்டாட்டம்தான்.

பதின்பருவத்தினர் நன்கு தூங்கட்டுமே!

போதுமான, ஆழ்ந்த, இடையூறு இல்லாத தூக்கம் குழந்தைகளையும் பெரியவர்களையும்விட பதின்ம வயதினருக்கு அதிமுக்கியம். ஆனால், அவர்கள் குறைவான நேரம் மட்டுமே தூங்குவதாக ஆய்வுகள் கூறுகின்றன. பதின்ம வயதிலுள்ள பிள்ளைகளை நேரத்துக்குத் தூங்கச் சொல்வதும், அதிகாலை எழச்செய்வதும் பெற்றோருக்குச் சவாலாக உள்ளது.

நிபுணர்கள் இரண்டு காரணங்களைச் சொல்கிறார்கள். 1. உடல் களைப்படையும்போதுதான் ஒருவர் இயல்பாகத் தூங்கத் தயாராவார். பதின் பருவத்தினரோ, இரவு வெகுநேரம்வரை களைப்படைவதே இல்லை. 2. தூக்கத்துக்கு உதவும் மெலடோனின் ஹோர்மோன் பதின்பருவத்தினருக்கு ஏறக்குறைய இரவு 11 மணிக்கு மேல்தான் சுரக்கத் தொடங்குகிறது. அதிகாலை 8 மணிவரையும் சுரக்கிறது. எனவே, எதையாவது செய்துகொண்டு அல்லது திறன்பேசியில் விளையாடிக்கொண்டு இருக்கிறார்கள். காலையில் அதிகநேரம் தூங்க விரும்புகிறார்கள். பள்ளிக்கூடம், வீட்டுப்பாடங்கள், மாலைநேரக் கல்வி, திறன்வளர் வகுப்புகள், சமூக ஊடகங்களின்

வளர்ச்சி போன்றவற்றுக்கு மத்தியில் போராடுகிறார்கள்.

ஒருபுறம், ஹோர்மோன் மாற்றங்கள் சீக்கிரம் தூங்கவிடுவதில்லை, மறுபுறம் ஆரோக்கியமான வாழ்வுக்கு அதிகநேரம் கண்டிப்பாகத் தூங்க வேண்டும். முரண்தான்! 0-18 வயதுடைய குழந்தைகள் மற்றும் பதின்பருவத்தினரின் ஆரோக்கியமான உடல்நலத்துக்குப் போதுமான தூங்கும் நேரத்தைப் பரிந்துரைக்க விரும்பிய நிபுணர்கள், தூங்கும் நேரத்துக்கும் உடல்நலத்துக்குமான தொடர்பு குறித்து அறிவியல்பூர்வமாக நடத்தப்பட்ட 864 ஆய்வுக் கட்டுரைகளை ஆய்வுசெய்தார்கள்; கலந்துரையாடினார்கள்; வாக்கெடுப்பு நடத்தினார்கள்.

முடிவில், அமெரிக்கன் அகடமி ஒவ் ஸ்லீப் மெடிசின் ஒருமித்த அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், ஆரோக்கியமான உடல்நலத்துக்கு, குட்டித் தூக்கத்தையும் சேர்த்து, 4-12 மாதக் குழந்தைகள் 12-16 மணி நேரம்; 1-2 வயதுக் குழந்தைகள் 11-14 மணி நேரம்; 3-5 வயதுக் குழந்தைகள் 10-13 மணி நேரம்; 6-12 வயதுக் குழந்தைகள் 9-12 மணி நேரம்; 13-18 வயது பதின்பருவத்தினர் 8-10 மணி நேரம் கண்டிப்பாகத் தூங்கவேண்டும் என்றார்கள்.

மேலும், தேவையான நேரம் தூங்குவதை வழக்கமாக வைத்திருக்கிறவர்களுக்குக் கவனிக்கும் ஆற்றல் அதிகரிக்கிறது, நடத்தை, கற்றுக்கொள்ளுதல், நினைவில் வைத்தல், உணர்வுச் சமநிலை, தரமான வாழ்வு, உல-மன ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படுகிறது. தேவையான நேரத்தைவிடக் குறைவாகத் தூங்குவதை வழக்கமாக வைத்திருப்பது, கவனம் செலுத்துதல், கற்றல் மற்றும் நடத்தையில் தாக்கம் ஏற்படுத்துகிறது. விபத்து, காயம், உடல் பருமன், மனச்சோர்வு, நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது. தன்னைக் காயப்படுத்திக்கொள்ளும் எண்ணம், தற்கொலை எண்ணம், தற்கொலை முயற்சி ஆகியவற்றுக்கும் காரணமாகிறது. தேவையான நேரத்தைவிடக் கூடுதலாகத் தூங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளவர்களின் உடல்நலமானது உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, உடல் பருமன் மற்றும் மனநலச் சிக்கல்களால் மிகவும் மோசமாகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

குழந்தைகளை ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிநடத்தவேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு இருக்கிறது. ஆனால், பெற்றோர்களோ நல்ல பாடசாலை , நல்ல மதிப்பெண், நல்ல வேலை, நல்ல ஊதியம் ஆகியவற்றை முன்னிறுத்தியே சிந்திக்கிறார்களேயொழிய, பிள்ளைகளின் உடல், மனநலத்தைப் பொதுவாகக் கவனத்திற்கொள்வதே இல்லை. தொலைதூரத்திலுள்ள பாடசாலையில் சேர்த்து, அதிகாலை ஆறு மணிக்கெல்லாம் சிலர் அனுப்பிவிடுகிறார்கள். 'பாடசாலை நிர்வாகமே காலை உணவும் கொடுக்கிறது' என்று பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள் வேறு சிலர்.

வேலைக்கு, கடைகளுக்கு, கூட்டங்களுக்குச் சென்றுவிட்டு அல்லது தொலைக்காட்சியிலும் கணினியிலும் நேரம் செலவழித்துவிட்டுக் குழந்தைகளுக்குத் தாமதமாக உணவு கொடுக்கும் குடும்பங்களும் இருக்கின்றன. சாப்பிட்ட பிறகும், படுக்கையில் படுத்தபடியும் திறன்பேசியிலோ தொலைக்காட்சியிலோ நேரம் செலவிடும் பெற்றோர்களும் இருக்கிறார்கள். படிப்பறைக்குச் சென்றும் படிக்கவும், பூஜையறைக்குச் சென்றும் பிரார்த்திக்கவும் தோன்றுவதுபோல, தூங்கும் இடத்துக்குச் சென்றும் தூக்கம் வர வேண்டும்.

அதற்கு, வெளிச்சம் ஏறுமின்றித் தூங்குமிடம் இருட்டாக இருப்பது சிறந்தது. படுக்கையறையில் தொலைக்காட்சி, தூக்கத்தின் முதல் எதிரி. தாங்கள் எப்போது, எப்படித் தூங்க வேண்டும் என்பதைப் பெற்றோரிடமிருந்துதான் பிள்ளைகள் கற்றுக்கொள்கிறார்கள் எனும்போது, பெற்றோரே தூங்குவதற்கு ஒழுங்கில்லாமல் இருந்தால் பிள்ளைகள் என்ன செய்வார்கள்.'

திறன்பேசி, தொலைக்காட்சி பார்ப்பதால் தூக்கம் வருவதில்லை என்பதை உணராமல், தூக்கம் வரவில்லை, அதனால் பார்க்கிறேன் என்கிறார்கள் சிலர். சூரியனிலிருந்து வெளிப்படும் நீல ஒளி நமக்குப் புத்துணர்வு தருகிறது. நம் உடல் வளர்ச்சியிலும், மன வளர்ச்சியிலும் அதிக பங்கு வகிக்கிறது. இயற்கையான நீல ஒளி மட்டுமல்ல, செயற்கையான நீல ஒளியும் நமக்குப் புத்துணர்வு தரும். அதனால்தான், ஓய்வெடுக்க வேண்டிய நேரத்தில் திறன்பேசி, கணினி, தொலைக்காட்சி பயன்படுத்தும்போது, செயற்கையான நீல ஒளி உடல் தூங்க விரும்பும் நேரத்தில் தூங்கவிடாது செயலூக்கத்துடன் இருக்கச் செய்கிறது. மெலடோனின் சுரப்பைத் தடுக்கிறது. தூங்குவதற்கு நிறைய நேரம் எடுக்கிறது. என் நண்பர் ஒருவர், ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் அவரது மகனின் வட்ஸ்அப்பில், கடைசியாகப் பார்த்த நேரம் அதிகாலை 4 மணி எனக் காட்டியதாகச் சொல்லி வருத்தப்பட்டார். உண்மைதான், தனக்கான அடையாளத் தேடலிலுள்ள பதின்பருவத்தினர், தங்கள் பதிவுக்கு எவ்வளவு பேர் விருப்பக் குறி (லைக்) இட்டுள்ளார்கள் என்று நள்ளிரவிலும் அவ்வப்போது பார்க்கிறார்கள்.

நெதர்லாந்தில், நீல ஒளியைத் தவிர்ப்பதற்கான கண்ணாடி அணிந்து பயன்படுத்தியவர்கள், அப்படி எதுவுமில்லாமல் வழக்கம்போலப் பயன்படுத்தியவர்கள், திறன்பேசியை சீக்கிரமே அணைத்துவிட்டுத் தூங்கியவர்கள் என 3 குழுக்களாகப் பிரித்து 12-17 வயது மாணவர்களிடம் ஓர் ஆய்வு நடத்தினார்கள். அன்றாட நட-வடிக்கைகளைக் குறித்துக்கொள்வது, கருவியின் துணையால் தூங்குவதைக் கண்காணிப்பது ஆகியவற்றுடன், மெலடோனின் மாத்திரையையும் எடுத்துப் பரிசோதித்தார்கள். முடிவில், தூங்குவதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பாகத் திறன்பேசி, நோட்பேட் உள்ளிட்டவற்றை அணைத்து வைத்த பதின்பருவத்தினர் விரைவாகவும் ஆழ்ந்தும் தூங்கியதாகவும், நீல ஒளியைத் தவிர்ப்பதற்கான கண்ணாடி அணிந்தவர்கள் இரண்டாமிடத்தில் இருந்ததாகவும் கண்டறிந்தார்கள்.

ஆரோக்கியமான நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பிள்ளைகளுக்கு வழங்குவது உங்கள் உள்ளார்ந்த விருப்பமென்றால், கும்பமே இணைந்து செயல்திட்டம் தீட்டுவதும் அதைப் பின்பற்றுவதும் நல்ல பயனளிக்கும். அதேபோல், குழந்தைகள், பதின்பருவத்தினர், பெற்றோர், கல்வியாளர்கள், மருத்துவர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் போதுமான தூக்கத்துப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதனால், ஏற்படும் சமூக, பொருளாதார, கல்விசார் பயன்களை மக்களிடம் தெரிவித்துக் கலந்துரையாடலைத் தொடங்க வேண்டும். சின்னச் சின்ன வழிமுறைகளைப் பழக்கிக்கொண்டால், பெரிய பெரிய உடல் பிரச்சினைகள் வராமல் தவிர்க்கலாம்.

சூ.ம.ஜெயசீலன்,
எழுத்தாளர்,
நன்றி - இந்து தமிழ்

தவக்கால சிந்தனை

மிகுதியான மீப்பு அவரிடமே உண்டு

இயேசு நாசரேத்துக்கு வந்திருந்தபோது தொழுகைக்கூடத்தில் மக்களை நேரக்கிக் கூறியது: "நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

உண்மையாக நான் உங்களுக்குச் சொல்கிறேன்: எலியாவின் காலத்தில் மூன்றரை ஆண்டுகளாக வானம் பொய்த்து; நாடெங்ும் பெரும் பஞ்சம் உண்டானது. அக்காலத்தில் இஸ்ரயேலரிடையே கைம்பெண்கள் பலர் இருந்தனர்; ஆயினும் அவர்களுள் எவரிடமும் எலியா அனுப்பப்படவில்லை; சீதோனைச் சேர்ந்த சாரிபாத்தில் வாழ்ந்த ஒரு கைம்பெண்ணிடமே அனுப்பப்பட்டார். மேலும், இறைவாக்கினர் எலிசாவின் காலத்தில் இஸ்ரயேலரிடையே தொழுநோயாளர்கள் பலர் இருந்தனர்; ஆயினும் அவர்களுள் எவருக்கும் நோய் நீங்கவில்லை. சிரியாவைச் சார்ந்த நாமானுக்கே நோய் நீங்கியது. தொழுகைக்கூடத்தில் இருந்த யாவரும் இவற்றைக் கேட்டபோது, சீற்றங்கொண்டனர்; அவர்கள் எழுந்து,அவரை ஊருக்கு வெளியே துரத்தி, அவ்வூரில் அமைந்திருந்த மலை உச்சியிலிருந்து கீழே தள்ளிவிட இழுத்துச் சென்றனர். அவர் அவர்கள் நடுவே நடந்து சென்று அங்கிருந்து போய்விட்டார்.

இன்றைய நாளில்...

* 1919 – ஹங்கேரிய சோவியத் குடியரசு நிறுவப்பட்டது. ரஷ்யாவில் நிகழ்ந்த ஒக்டோபர் புரட்சிக்குப் பின்னர் ஐரோப்பாவில் உருவான முதலாவது பொதுவுடைமை அரசு இதுவாகும்.
* 1921 – கம்யூனிஸப் போரினால் ஏற்பட்ட பொருளாதார இழப்பை ஈடுசெய்ய புதிய பொருளாதாரக் கொள்கையை லேல்செவிக் கட்சி நடைமுறைப்படுத்தியது.
* 1948 – முகமது அலி ஜின்னா உருது மட்டுமே பாகிஸ்தானின் அரசு மொழியாக இருக்கும் என டாக்காவில் வைத்து அறிவித்தார்.
* 1965 – நாசா ரேஞ்சர் 9 என்ற சந்திரனுக்கான தனது ஆளில்லா விண்ணுளவியை ஏவியது.
* 1984 – மணலாறு பிரதேசத்தைத் தலைவலயமாக்கி இலங்கை அரசு அங்கு வாழ்ந்து வந்த தமிழர்களை அடித்து விரட்டியது .
* 1990 – 75 ஆண்டுகால தென்னாபிரிக்க ஆட்சியிலிருந்து நமீபியா விடுதலை பெற்றது.
* 2006 – ட்விட்டர் சமூக ஊடகம் உருவாக்கப்பட்டது.

நக்கல் நமசிவாயம்

சீனாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு தயாராகிறது அரசு

தூதுவருடனான சந்திப்பில் வெளிநாட்டு அமைச்சர் தெரிவிப்பு

சீனத் தூதுவர் குய் சென்ஹோங், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டதன் 65ஆவது ஆண்டு நிறைவையும், 1952ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கிடையிலான ரப்பர்-அரிசி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் 70ஆவது ஆண்டு நிறைவையும் நினைவுகூரும் வகையில் சீன அதிகாரிகளாக் வெளியிடப்பட்ட முதல் நாள் அட்டைப்படம் சீனத் தூதுவரால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் இதன்போது கையளிக்கப்பட்டது.

49 ஆவது மனித உரிமைகள் பேரவையின் போது, சீன அரசாங்கம் வழங்கிய ஆதரவை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பாராட்டினார். கடந்த மனித உரிமைகள் பேரவை அமர்வின் போது சீனா வழங்கிய ஆதரவை நினைவு கூர்ந்த அமைச்சர் பீரிஸ், உதவிகள் தேவைப்படும் போது எதிர்காலத்திலும் சீனா ஆதரவை வழங்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்க - சீன சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் தற்போதைய பேச்சுவார்த்தைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் 7ஆவது சுற்றுப்

பேச்சுவார்த்தைகள் இலங்கையில் உள்ள அந்தந்த நிறுவனங்களின் ஆதரவுடன் விரைவில் ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

தற்போது நிலவும் உணவு, மருந்து மற்றும் சீமெந்துத் தட்டுப்பாடுகளைத் தீர்ப்பதற்காக மூன்று குழுக்களை ஜனாதிபதி நியமித்துள்ளதாகவும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சீனத் தூதுவருக்கு விளக்கமளித்தார்.

சீனாவுடன் 26 சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில் சீனா கைச்சாத்திட்டுள்ளதை சுட்டிக்காட்டிய தூதுவர் குய், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை இறுதி செய்வது இலங்கையின் உள்ளூர் சந்தைக்கும் உற்பத்திகளுக்கும் பாரிய நன்மை பயக்கும் என சுட்டிக்காட்டினார். சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் 7ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளை விரைவில் மீண்டும் தொடங்குமாறு அவர் இலங்கை அதிகாரிகளை வலியுறுத்தினார்.

மேலும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு நன்றிகளைத் தெரிவித்த சீனத் தூதுவர், இலங்கைக்கான அரச அவை உறுப்பினரும், வெளிநாட்டு அமைச்சருமான வாங் யீயின் வெற்றிகரமான உத்தியோகபூர்வ விஜயத்தை 2021ஆம் ஆண்டு டிசம்பரில் பிற்பகுதியில் ஏற்பாடு செய்தமைக்காக மிகுந்த திருப்தியை வெளிப்படுத்தினார். சீன சமூகக் கட்சியை நிறுவி 100 ஆண்டுகள் நிறைவடைந்தமை முன்னிட்டு நினைவு நாணயம் ஒன்றை வெளியிட்டமைக்காக இலங்கை அரசாங்கத்திற்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குமிடையில் நிலவுகின்ற அரசாங்கங்களுக்கிடையிலான தொடர்புகள், மக்களுக்கிடையிலான தொடர்புகள் மற்றும் கட்சிகளுக்கிடையிலான தொடர்புகள் உட்பட வலுவான இருதரப்பு உறவுகள் குறித்து இரு தரப்பினரும் மிகுந்த திருப்தியை வெளிப்படுத்தின.

பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, சீனத் துதரகத்தின் அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளும் இந்த சந்திப்பில் இடம்பெற்றிருந்தனர்.

யாழில் போதைப்பொருளுக்கு அடிமையான

இளைஞர் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

ஹெரோயின் போதைப்பொருளை அதிகளவு எடுத்துக்கொண்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு வாரங்களுக்குள் இரண்டாவது இளைஞர் போதைப்பொருளை அதிகளவு எடுத்துக்கொண்டதால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே நேற்று முற்பகல் வீட்டில் உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர், போதைப்பொருளுக்கு கடந்த 4 ஆண்டுகளாக அடிமையாக இருந்து வந்துள்ளார். அதனால் வீட்டில் பணம் கேட்பது மற்றும் திருட்டுகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார். அவரை மறுவாழ்வு நிலையத்துக்கு அனுப்ப பெற்றோர் முயற்சித்துள்ளனர்.

நேற்று காலை ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக்கொண்டுவிட்டு வீட்டுக்கு வந்த இளைஞர் நெஞ்சைப் பிடித்தவாறு நிலத்தில் சரிந்து உயிரிழந்துள்ளார் என விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இளைஞரின் உயிரிழப்பு அதிகளவு ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக்கொண்டமையினால் ஏற்பட்டது என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

போதை மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்ட தெல்லிப்பழை கட்டுவன் மேற்கைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவர் கடந்த 4ஆம் திகதி உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் இடம்பெற்ற வருடாந்த பிறைக்குழு மாநாடு

(பி.எம். முக்தார்)

கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர் அதன் உறுப்பினர்கள் இணைந்து ஏற்பாடு செய்த வருடாந்த பிறைக்குழு மாநாடு நேற்று (20) கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக் குழு தலைவரும் வத்தளை அபூ ஹுறைரா அரபுக் கல்லூரி அதிபருமான உஸ்தாத் கலீப்பதுஷ் ஷாதுலி மௌலவி எம்.பி.எம் ஹிஷாம் (பதாஹி) இம்மாநாட்டுக்கு தலைமை வகித்தார்.

ஹிஜ்ரி 1443 ரமழான் மற்றும் ஷவ்வால் மாதங்களுக்குண்டான தலைப் பிறைகளின் வானியற் கணிப்பீடுகள் என்ற தலைப்பில் மௌலவி எம்.ஆர்.அப்துர் ரஹ்மானும், பிறை பார்த்தல் முக்கியத்துவம் என்ற தலைப்பில் மௌலவி ஏ.எல்.எம் மஸீன் மஹ்தூமி (ஹஸலி) யும் தலைப் பிறையை தீர்மானிப்பதில் சாட்சியத்தின் வகிபாகம் என்ற தலைப்பில் மௌலவி சீ.ஐ.எம் அஸ்மீர் (ஹஸலி) யும், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் கடந்த கால வரலாறு என்ற தலைப்பில் மௌலவி ஏ.எச்.ஏ. சுஹைப் ஹஸலியும் உரை நிகழ்த்தினர்.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபைத்தலைவர் எம்.தௌபீக் ஸுபைர் உட்பட மற்றும் பலரும் இங்கு உரை நிகழ்த்தினர். மௌலவி எம்.எம். அஹமெட் ஷுஹுப் (ஜமாலி- பயாஸி) துஆப் பிரார்த்தனை நிகழ்த்தினார். இம்மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசலின் அகில இலங்கை சீதிலினை உப பிறைக்குழுக்களின் உறுப்பினர்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், இமாம்கள், அரபுக் கல்லூரிகளின் உஸ்தாத்மார்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் உட்பட உலமாக்கள், புத்திஜீவிகள் பலரும் கலந்து கொண்டனர். கொழும்பு உம்மு ஸாலியா அஜ்வாதீய்யா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி அஹமட் (மஹ்ரி) நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக் குழு தலைவரும் வத்தளை அபூ ஹுறைரா அரபுக் கல்லூரி அதிபருமான உஸ்தாத் கலீப்பதுஷ் ஷாதுலி மௌலவி எம்.பி.எம் ஹிஷாம் (பதாஹி) முக்கிய உரைநிகழ்த்தினார்.

இந்தியாவுடனான பரஸ்பர ஒப்பந்தங்களையும் அரசாங்கம் நேர்மையுடன் அனுசரிப்பது அவசியம்

19ஆம் திருத்தம் பிரதியீடு செய்ய மேற்கத்தேய நாடுகள் நிர்ப்பந்திக்க வேண்டுமென மனோ எம்.பி. வலியுறுத்து

பொருளாதார சீரழிவு மற்றும் அரசியல் ஸ்திரமின்மை ஆகியவற்றை இந்தியாவின் உதவியுடன் பாதுகாக்க முயலும் அரசாங்கம், இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள பரஸ்பர ஒப்பந்தங்களையும் நேர்மையுடன் அனுசரிக்க வேண்டுமென ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து நேற்று முன்தினம் (19) வெளியிட்டுள்ள ஊடக அறிவித்தலிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இந்தியாவிடம் நூறுகோடி அமெரிக்க டொலர் புதிய கடன் பெற்று அதன் மூலம் அங்கிருந்து உணவு, மருந்து, எண்ணெய் ஆகிய அத்தியாவசிய பொருட்களையும் இலங்கை பெறுகிறது. கடந்த காலங்களில் இந்தியாவை திட்டித் தீர்த்து, கசித்து கொட்டிய, இவர்கள், இன்று, புதுடெல்லிக்கு போய் கைகட்டி நிற்கிறார்கள். இந்த இந்திய கடனுதவி கிடைத்திராவிட்டால், இந்த சித்திர சிங்கள-தமிழ் புது வருடம், ராஜபக்ஷ அரசுக்கு கடைசி வருடமாகி இருக்கும். புத்தாண்டின் போது இலங்கை அரசின் நிலைமையும் சிரிப்பாய் சிரித்திருக்கும்.

அதேபோல் சர்வதேச நாணய நிதியத்துடன்

உரையாடி பழைய கடன்களை மறுசீரமைக்க முயல்கிறார்கள். அதுதான் செய்ய வேண்டும். வேறு வழியில்லை. இதற்கு முன் நடைபெற்ற ராஜபக்ஷ அரசாங்கங்கள் கண்மூடித்தனமாக கடன் வாங்கி, பிரயோஜனமற்ற விடயங்களில் முதலீடு செய்து, வீணடித்து ஏற்றி வைத்துள்ள கடன் சுமையை, திருப்பி செலுத்த, கால அவகாசம் பெற்று, மறுசீரமைக்காவிட்டால், இலங்கை அதோகதிதான்.

நாட்டை இந்த நிலைமைக்கு கொண்டு வந்துள்ள இந்த ராஜபக்ஷாக்களின் மூளைகளை, கொழும்பு நூதனசாலையில் வைத்து பாதுகாக்க வேண்டும்.

தேசிய பாதுகாப்பை கரிசனையில் எடுக்காமல் இன்றைய அரசாங்கம் அராஜகமாக செயற்பட்டது. இந்நிலைமை நீடித்திருந்தால், இங்கும் ஒரு உக்ரைன் நிலைமை ஏற்பட்டிருந்தாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை. இன்று இலங்கை - இந்திய உறவுள் ஒப்பீட்டளவில் சீரமைக்கப்பட்ட காரணத்தால் இந்நிலைமை தவிர்க்கப்பட்டுள்ளது என நினைக்கிறேன்.

பொருளாதார சீரழிவு மற்றும் அரசியல் ஸ்திரமின்மை ஆகியவற்றை இந்தியாவின் உதவியுடன் பாதுகாக்க முயலும் அரசாங்கம், இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள பரஸ்பர ஒப்பந்தங்களையும் நேர்மையுடன் அனுசரிக்க வேண்டும். 1964இன் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம், 1974 சிறிமா-இந்திரா ஒப்பந்தம், 1987ன் ராஜீவ்-ஜே.ஆர். ஒப்பந்தம் ஆகியவற்றின் அமுலாக்கல்கள் தொடர்பில் இலங்கை அரசு பதில் கூற வேண்டியுள்ளது. இவற்றை கண்காணிக்கும் கடப்பாடு இந்திய அரசுக்கும் இருக்கிறது.

அதேவேளை, இதற்கு முன் நடைபெற்ற ராஜபக்ஷ அரசாங்கங்கள் வாங்கி, பிரயோஜனமற்ற விஷயங்களில் முதலீடு செய்து வீணடித்த கடன் சுமையை, திருப்பிச் செலுத்த, கால அவகாசம் பெற்று, மறு சீரமைக்க, சர்வதேச நாணய நிதியை நமது அரசாங்கம் நாடுகிறது.

சர்வதேச நாணய நிதியை பற்றி இலங்கையில் பாரம்பரியமாக நல்லெண்ணம் கிடையாது. எனினும் இன்று கடன் சுமையை மறு சீரமைக்க வேறு வழி இருப்பதாக தெரியவில்லை.

இந்தியாவிடம் புதிய கடன் வாங்கி அத்தியாவசியப் பொருட்களை மக்களுக்கு வழங்குவதை போன்று சர்வதேச நாணய நிதியத்திடம், பொருள் வாங்க கடன் பெற முடியாது. இதுபற்றி இன்றைய அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கே தெளிவில்லை. சர்வதேச நாணய நிதியை நாடுவது ஏற்கனவே வாங்கிய கடன்களை, கால அவகாசம் பெற்று எப்போது, எப்படி திருப்பி செலுத்துவது என்ற மறுசீரமைப்புக்காக என்பதை மறக்கக் கூடாது.

அதேவேளை சர்வதேச நாணய நிதி, ஐரோப்பிய யூனியனின் ஜீ.எஸ்.பி. ப்ளஸ் போன்ற நிறுவன செயற்பாடுகளுக்கு பின் நிற்கும் மேற்கத்தைய நாடுகள், இந்நாட்டில் இன்றுள்ள 20ஆம் திருத்தம் அகற்றப்பட்டு, அதை பழைய அசல் வடிவத்துகுடன் 19ஆம் திருத்தம் பிரதியீடு செய்ய வேண்டும் என இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். ஒரு காலத்தில் 20ஆம் திருத்தம் மூலம் உருவான சர்வாதிகார ஜனாதிபதியை வரவேற்ற இலங்கை மக்கள், இன்று 20ஆம் திருத்தம் போய் 19ஆம் திருத்தம் மீண்டும் அமுலுக்கு வருமானால் அதை வாழ்த்தி வரவேற்பார்கள். ஆகவே அதற்கான நிபந்தனை விதிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திய கடற்படையின் ஐந்து பாய்மரக்கப்பல்கள் இலங்கை வருகை

நட்புறவு பாலங்களை கட்டியெழுப்பும் இந்திய கடற்படையின் பெரு முயற்சியின் தொடர்ச்சியாக கடந்த 10ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் (19) வரையில் இந்திய கடற்படையைச் சேர்ந்த 5 பாய்மரக்கப்பல்கள் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தன.

கதேசிய முறையிலான இப்பாய்மரக்கப்பல்களில் மாதே, தரினி, புள்புல், கடல்புறா மற்றும் ஹரியால் உள்ளிட்டவை அடங்குகின்றன. இலங்கை கடற்படைக்கு சமுத்திரத்தில் பாய்மரக்கப்பலோட்டும் பயிற்சிகள் மற்றும் அனுபவங்களை வழங்கும் நோக்குடன் இந்த விஜயம் மேற்கொள்ளப்படுகிறது. 2022 மார்ச் 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரையான காலப்பகுதிகளில் இக்கப்பல்கள் திருகோணமலையில் தரித்து நின்றதுடன் இலங்கை கடற்படையின் இரு பெண் அதிகாரிகள் உட்பட 14 அதிகாரிகள் கொழும்பில் கப்பலோட்ட பயிற்சிகளுக்காக இணைந்துள்ளனர். அத்துடன் கப்பல்கள் துறைமுகத்தில் தரித்து நிற்கும் நிலையில் இந்திய கடற்படை அதிகாரி ஒருவரால் இலங்கை கடற்படையினருக்கான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

இந்திய கடற்படை பாய்மரக்கப்பல் பிரிவின் சிரேஷ்ட அதிகாரியான கொமொடோர் பி.ஆர்.சிங் திருகோணமலையில் கிழக்கு பிரதந்திய கடற்படை தலைமை அதிகாரியல் அட்மிரல் ஜெயந்த குலரட்னே மற்றும் கொழும்பில் மேற்கு பிரதந்திய கடற்படையின் பிரதி தலைமை அதிகாரி ரியல் அட்மிரல் ஏ.யூ.சி. டீ.சில்வா ஆகியோரை இவ்விஜயத்தின் போது சந்தித்திருந்தார். இந்திய கடற்படையினரால் வழங்கப்படும் பாய்மரக்கப்பல் பயிற்சிகள், இலங்கை கடற்படை அதிகாரிகளுக்கு சாகச விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தை தூண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2010ஆம் ஆண்டில் கொமாண்டர் திலீப் தொன்டே, ஐ.என்.எஸ்.வி.மாதே கப்பலில் தனியாளாக உலகை சுற்றிவந்த நிலையில், 2012ஆம் ஆண்டில் லெப்டினன்ட் கொமாண்டர் அபிலாஷ் டோமியால் இடைநிறுத்தப்படாத தனி பயணம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்ததை இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளப்பட வேண்டும். மேலும் நாவிகா சாகர் பரிக்கிரமா திட்டத்தின் (ஆறு பெண் அதிகாரிகளைக் கொண்ட குழு) ஒரு பகுதியாக 2019ஆம் ஆண்டில் ஐ.என்.எஸ்.வி. தரினி கப்பல் வெற்றிகரமாக உலகை சுற்றி வந்திருந்தது. இந்நிலையில் இலங்கை கடற்படையினர் மத்தியில் சாகச விளையாட்டுகள் மற்றும்

பாய்மரக்கப்பலோட்டல் குறித்த ஆர்வத்தினை மேம்படுத்துவதற்கான ஆதரவினை வழங்கும் முகமாக, இந்திய கடற்படையின் மேற்கு பிரதந்திய கடற்படை தலைமை அதிகாரி ரியல் அட்மிரல் சமீர் சக்சேனா கதேசிய முறையில் சொந்த நாட்டில் தயாரிக்கப்பட்ட பாய்மரக்கப்பலோட்டல் பொறித்தொகுதியை இலங்கை கடற்படையின் பொது நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் ரியல் அட்மிரல் பி.எஸ். மகாவிதானவிடம் கடந்த 12ஆம் திகதி ஐ.என்.எஸ். சென்னை கப்பலில் இடம்பெற்றிருந்த நிகழ்வொன்றில் கையளித்திருந்தார்.

இரண்டு கடற்படையினருக்கும் இடையில் அண்மைய காலங்களில் காணப்படும் நெருக்கமான ஈடுபாடுகள், மிகவும் ஆழமாக வேரூன்றி காணப்படும் நட்புறவுக்கு மேலும் வலுவூட்டியிருக்கும் அதேவேளை, இடையூறத இயங்குத்திறனையும் உருவாக்கியுள்ளது. இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கைக்கு அமைவாக இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் மிகவும் நெருக்கமான பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் ஒன்றினையது ஆகியவற்றின் குறியீடாக இந்திய கடற்படை கப்பல்களின் விஜயம் அமைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கல்வியை முடித்துவிட்டிருக்கும் மாணவிகள் உட்பட சுயத்தொழிலில் ஆர்வமுள்ளவர்களுக்கான தொழிற்பயிற்சிகளை வழங்கி வரும் டலண்ட் ஹப் அகடமிக் அண்மையில் பயிற்சிகளை முடித்துக் கொண்டவர்களுக்கான பட்டமளிப்பு விழா அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அக்கடமியின் பணிப்பாளர் பல்லியா ரமீஸ் தலைமையில் இடம்பெற்றது. (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

பெயர்மாற்றம்

இல: 538, காளி கோவில் வீதி, தேவபுரம், மட்டக்களப்பு எனும் முகவரியைச் சேர்ந்த செல்வநாயகம் டிலேக்கா தேசிய அடையாள அட்டை இலக்கம் 200058401920 ஆ கொண்ட நான் இன்று முதல் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை செல்வநாயகம் பாத்திமா மன்ஹா என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையாப்பமிடுவேன் எனவும் இத்தால் மூலம் இலங்கை ஜனாபதி செயலகச் குடியரசுக்கும், மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

செல்வநாயகம் பாத்திமா மன்ஹா

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

திட்டமற்ற மின்வெட்டு காரணமாக மாத்தளை வர்த்தகர்கள் பாதிப்பு

மின்சார சபை கவனம் செலுத்துமாறு கோரிக்கை

(மாத்தளை நிருபர்)

நாட்டில் சமீபகாலமாக நடைமுறைப்படுத்தப்படும் மின்வெட்டை மாத்தளை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தும்போது எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் நடைமுறைப்படுத்துவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் நகர வர்த்தகர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள், தொலைத்தொடர்பு முகவர்கள், அச்சக உரிமையாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் பாதிக்கப்படுவதாகவும் இதனை மின்சார சபையினர் கவனத்திலெடுத்து அதற்கான தீர்வினை பெற்றுத்தருமாறும் நகர வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நாட்டில் அமுல்படுத்தப்படும் மின்வெட்டு மாத்தளையிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தும்போது மேற்படி பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றன.

கடந்த சில நாட்களாக மேற்படி பகுதிகளில் மின்வெட்டு இடம்பெறும்போது எவ்வித முன்னறிவிப்புமின்றி காலை 8.30 மணி தொடக்கம் 11.30 மணிவரையும் சில நாட்களில் 11.30இற்கு துண்டிக்கப்படும் மின்சாரம் தொடர்ந்து செல்வதால் திட்டமிட்டபடி தமது தொழில்களையும் வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

தங்கள் நிலையங்களில் தொழில் புரியும் ஊழியர்கள் மேற்குறிப்பிட்ட நேரங்களில் வெறுமனே இருந்து 8 மணிநேரம் தொழில்புரியவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. திட்டமற்ற மின்வெட்டு காரணமாக திங்கழும் 3 அல்லது 4 மணித்தியாலங்கள் தொழில் புரியும்போது அவர்களுக்கான சம்பளம் முழு நேரமாக வழங்கவேண்டிய இக்கட்டான நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

'தங்களது வாடிக்கையாளர்களின் தேவைகளை நிவர்த்திசெய்துகொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால் திட்டமற்ற மின்வெட்டு காரணமாக எமது வர்த்தக நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளதாக அச்சகம் மற்றும் இதர தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த இப்பகுதிகளில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தும் போது முன்னறிவித்தல் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால் தங்களது தேவைகளை நேரத்துக்கேற்ப தாம் அமைத்துக்கொள்ள வசதியாக இருக்கும் எனவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றன.

எனவே, மாத்தளை மாவட்டத்தை அண்மித்த பகுதிகளில் குறிப்பிட்ட நேரத்துக்கான திட்டமிட்ட மின்வெட்டை நடைமுறைப்படுத்தும்போது தங்களது தொழில் நடவடிக்கைகளுக்கு பாதிப்புகள் ஏற்படாவண்ணம் மின்வெட்டை நடைமுறைப்படுத்துமாறு வர்த்தகர்கள் வினயமாக கேட்டுக்கொள்கின்றனர்.

புலமைப்பரிசில் சித்தி

2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பதுளை - உடுவரை கீழ்ப்பிரிவு தமிழ் வித்தியாலயத்திலிருந்து தோற்றியவர்களில் வரதராஜா சவிதியா (157), பிரேமசுந்தர் தனுக துஷாரா(161), பிரபாகரன் சோபிதா(157) ஆகியோர் மேற்படி புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்களுடன் பாடசாலை அதிபர் வி.பி.பொன்னம்பலம், வகுப்பாசிரியைகளான சந்திரிகா ராஜேஷ்வரன், தமிழ்வாணி இன்பராஜ் ஆகியோரும் காணப்படுகின்றனர். **(பதுளை நிருபர்)**

2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பண்டாரவளை கல்வி வலயத்தின் பள்ளக்டுவ இந்துகல தமிழ் வித்தியாலயத்தின் மாணவி எஸ்.ரிமாஷினி (155) புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவர் நமுனுகுலை டங்கரவ தமிழ் வித்தியாலய ஆசிரியை பிரதிகலாவின் புதல்வியாவார். இவருக்கு கற்பித்த ஆசிரியை டி.ஜெகதீபா மற்றும் அதிபர் எம்.ஆரைத்துபிபி ஆகியோருக்கும் மாணவிக்கும் பாடசாலை சமூகம் வாழ்த்துகளை தெரிவிக்கின்றது.

(கினிகத்தேனை நிருபர்)

2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் பசறை கல்வி வலயத்திற்குட்பட்ட கனவரல்ல இல.03 தமிழ் வித்தியாலயத்திலிருந்து தோற்றியவர்களில் ஆ.கபிஷான் (174), ஏ.ஜுதர்ஷா(151) ஆகியோர் மேற்படி புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்களுடன் அதிபர் ப.ஜெயபிரகாஷ், வகுப்பாசிரியர் சுப்பையா ஜெயலிதா, பகுதித்தலைவர் சு.சுபத்ரா ஆகியோர் காணப்படுகின்றனர். **(நடராஜா மலர்வேந்தன்)**

2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் பசறை கல்வி வலயத்திற்குட்பட்ட ஹொப்டன் - விக்னேஷ்வரா தமிழ் வித்தியாலயத்திலிருந்து தோற்றியவர்களில் எஸ்.திலக்சன்(152), எஸ்.ஷென் ரெஜினோல்(162), ஆர்.திலருக்ஷி(150), வி.பிரனித்தா(154), பி.தனுசிக்கா(155) ஆகியோர் மேற்படி புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்தவர்களுடன் அதிபர் எஸ்.மகேஷ்வரன், வகுப்பாசிரியர் நடராஜா புவனேஷ்வரன் ஆகியோரையும் காணலாம்.

(நடராஜா மலர்வேந்தன்)

2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பண்டாரவளை கல்வி வலயத்துக்குட்பட்ட பள்ளெகெட்டுவ கலப்பிட்டகந்த தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து தோற்றியவர்களில் கமிஷோத் மதுகேன் (157), ஸ்ரீதிருக்குமரன்(150), ஸ்ரீலிய்யா சியோமி(150), சி.தக்ஷிகா(149) ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்தவர்களுடன் பாடசாலை அதிபர் திருமதி ரஞ்சனி இந்திரா, உப அதிபர் லூகாஸ், ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவர் திருமதி சுதந்தலா தேவி, வகுப்பாசிரியர் செ.நவரட்னராஜா ஆகியோரைக் காணலாம்.

(நடராஜா மலர்வேந்தன்)

2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் ஹட்டன் கல்வி வலயவரராஜா மேற்பிரிவு தமிழ் வித்தியாலயத்திலிருந்து தோற்றியவர்களில் பி.தக்சாயினி(160), என்.தபிதா(152), வி.சதுர்ஷா(149) ஆகியோர் மேற்படி புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இம்மாணவர்களை வழிநடத்திய அதிபர், கற்பித்த ஆசிரியை என்சியா குளோரி ஆகியோருக்கு பாடசாலை சமூகம் வாழ்த்துகளை தெரிவித்துள்ளது.

(மஸ்கெலியா நிருபர்)

மலையக மக்கள் முன்னணியின் மகளிர்தின விழா பதுளையில்

(க.கிஷாந்தன்)

'பால்நிலை சமத்துவத்தை உறுதிசெய்வோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தின விழா நேற்று(20) காலை பதுளை தபால் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் எஸ்.விஜயசந்திரனின் ஏற்பாட்டில் மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக மகளிர் முன்னணி ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இவ்விழா மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த விழாவில் ஆரம்ப உரையை அம்பகமுவ பிரதேச சபையின் உறுப்பினரும், மலையக மகளிர் முன்னணியின் பிரதித் தலைவியுமான திருமதி சுவர்னதை ஆற்றியதோடு, சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்ட பேராதெனிய பல்கலைக்கழகத்தின் முன்னாள் உதவி விரிவுரையாளர் குமாரசாமி தயானனி, சிரேஷ்ட விரிவுரையாளரும், பிரபல எழுத்தாளருமான திருமதி ராணி சீதரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கட்சியின் நிதிச் செயலாளர் புஷ்பா விஷ்வநாதன், கட்சியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம் மற்றும் கட்சியின் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வின்போது மகளிரது கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு, பதுளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் சாதனையாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியா வசந்த கால கொண்டாட்டம்

ஏப்ரல் மாதம் முழுவதும் சுகாதார வழிகாட்டல்களுக்கமைய நடத்த தீர்மானம்

(டி.சந்று)

நுவரெலியா மாநகர சபையின் ஏற்பாட்டில் இந்த வருடமும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதிமுதல் 30ஆம் திகதிவரை சுகாதார முறைக்கமைய நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக நுவரெலியா மாநகர சபை முதல்வர் சந்தனலால் கருணாரத்ன நேற்று முன்தினம் (19) அறிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சிடம் இருந்தும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைய நுவரெலியாவிலுள்ள சகல உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றுக்கு இது தொடர்பில் தெளிவுபடுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

வருடாவருடம் நடத்தப்படும் நுவரெலியா வசந்த கால கொண்டாட்டம் வழமைபோல் பாடசாலை மாணவர்களின் பேண்ட் வாத்திய நிகழ்வுகளுடன் ஆரம்பமாகும். நிகழ்வில் தொடர்ந்து வரும் நாட்களில், மோட்டார் ஈரோட்ப் போட்டி, மலர்க் கண்காட்சி, குதிரை பந்தயப்போட்டி, இசை நிகழ்வுகள், சர்வதேச டென்னிஸ், கொல்ப் போட்டிகள், பொலிஸாரின் சாகச நிகழ்வுகள் உட்பட பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

வசந்த கால நிகழ்வை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் நுவரெலியா போக்குவரத்து பொலிஸ் பிரிவினரால் விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் மாநகர சபை முதல்வர் தெரிவித்தார்.

இ.தொ.காவின் பதுளை மாவட்ட மகளிர் தின விழா பதுளை காரியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. பிரதேச சபை உறுப்பினர் சுந்தரவதனி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஹல்தமுல்ல பிரதேச சபையின் தவிசாளர் அசோக்குமார், இ.தொ.கா. இயக்குனர் சிறிதரன், இ.தொ.கா. அமைப்பாளரும் இ.தொ.காவின் பசறை பிரதேச பொறுப்பாளருமான கோவிந்தராஜ் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டனர். **(நடராஜா மலர்வேந்தன்)**

நானுஓயாவில் நடமாடும் சேவை

(டி.சந்று செ.திவாகரன்)

நுவரெலியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஏழு கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்தவர்களை ஒன்றிணைத்து மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை, ஆரம்பக் கல்வி இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்த சில்வா ஏற்பாட்டில் நானுஓயா நாவலர் தமிழ் பாடசாலையில் நடமாடும் சேவை ஒன்று நேற்று (20) இடம்பெற்றது.

இதன்போது முதியோர்களுக்கு கூப்பன் பதிவு செய்தல், இறப்பு, பிறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்கள் வழங்குதல், தேசிய அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுத்தல், பதிவு மேற்கொள்தல் ஆகியவற்றுக்கான சேவை, பொலிஸ் முறைப்பாடுகள் உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட்டன.

இந்நடமாடும் சேவையில் கலந்துகொண்டவர்களுக்கு கொரோனா தொற்றுப் பரவல் குறித்த தகவல்கள், புதுவிபரங்கள் மற்றும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட உதவிச் செயலாளர், பிரதேச செயலாளர் ஆகியோர் உட்பட அரச முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

பண்டாரவளையில் 150 அடி பள்ளத்தில் பாய்ந்த வேன்

(நடராஜா மலர்வேந்தன்)

பண்டாரவளையில் வேன் ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 150 அடி பள்ளத்தில் விழுந்து நேற்று முன்தினம் (19) இரவு விபத்துக்குள்ளானது. விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் ஐவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வெலிமடையிலிருந்து நிகழ்வு ஒன்றுக்காக பண்டாரவளைக்கு சென்று கொண்டிருந்த வேன் ஒன்று கஷ்வத்தை பகுதியில் வீதியை விட்டு விலகி சுமார் 150 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் ஐவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் தியத்தலாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வேன் பலத்த சேதங்களுக்குள்ளான நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஹாலிஎல பாடசாலை மாணவி படுகொலை:

சந்தேகநபர் ஏப்ரல் 01ஆம் திகதிவரை விளக்கமறியலில்

(ஹாலிஎல நிருபர்)

சர்வதேச மகளிர் தினமான கடந்த 8ஆம் திகதி ஹாலிஎல உடுவர பிரதேசத்தில் பாடசாலை மாணவி தர்மராஜ் லிதியாவை கோடரியால் தாக்கி படுகொலை செய்த சந்தேக நபர் ஏப்ரல் 01ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க பதுளை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பதுளை உடுவரை கீழ்ப்பிரிவைச் சேர்ந்த தர்மராஜ் லிதியா பாடசாலை முடிந்து ஹாலிஎலவிலிருந்து உடுவர வலஸ்பெத்த வீதியிலுள்ள தனது வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்தபோது இராமையா தியாகரன் என்பவரால் கோடரியால் தாக்கி கொலை செய்யப்பட்டிருந்தார். பதுளை நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்பான விசாரணைகள் எடுத்துக்கொள்ளப் பட்டன. சந்தேக நபர் அடையாள அணிவகுப்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்னர், சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் கூறப்படும் மூன்று சாட்சியங்களும் அழைக்கப்பட்டிருந்தன். இதன்போது அவர்களில் இருவர் சந்தேகநபரை அடையாளம் கண்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து சந்தேக நபர் ஏப்ரல் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க பதுளை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பதாகைகளுக்கு தீயிட்டு எதிர்ப்பையும் ஆற்றாமையையும் வெளிப்படுத்திய உறவுகள்

வீடியோவைக் காண...

வாகன சாரதி பொலிஸாரால் விசாரணை

(யாழ். நிருபர்)

பிரதமரை வரவேற்கும் முகமாக கட்டப்பட்டிருந்த பதாகைகளை காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் எரித்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை வந்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டுவிலில் புதிதாக கட்டப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்தினை திறந்துவைத்தார்.

இந்நிகழ்வுக்கு பிரதமர் வருவதனை எதிர்த்து பல வேறு கோரிக்கைகளை முன்வைத்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் உள்ளிட்டோர் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுக்க முயன்றனர்.

நிகழ்வு நடைபெறும் இடத்தில் போராட்டத்தினை முன்னெடுக்க முல்லைத்தீவிலிருந்து வந்திருந்தவர்களை மட்டுவில் அம்மன் ஆலயத்திற்கு அருகில் பொலிஸார் தடுத்து நிறுத்தி வாகனத்தில் இருந்து இறங்காதவாறு தடுத்து நிறுத்தியிருந்தனர்.

அதேவேளை, யாழிலிருந்து சென்றவேல் சுவாமிகள் உள்ளிட்டோர் மட்டுவில் வண்ணாத்திபாலம் பகுதியில் தடுத்து நிறுத்திய பொலிஸார் அவர்களையும் வாகனத்தில் இருந்து இறங்காதவாறு தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இந்நிலையில், நிகழ்வினை முடித்துக்கொண்டு பிரதமர் நிகழ்விடத்திலிருந்து புறப்பட்டதும் போராட வந்தவர்களை பொலிஸார் செல்வதற்கு அனுமதித்தனர்.

அதனையடுத்து வாகனத்தில் இருந்து இறங்கிய காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளிட்டோர் பிரதமரை வரவேற்று கட்டப்பட்டு இருந்த பதாகைகளை கிழித்து, தீயிட்டு எரித்து தமது எதிர்ப்பினையும் ஆற்றாமையையும் வெளிப்படுத்தினர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸுக்கு கொரோனா

(யாழ். நிருபர்)

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நுவினதீவுக்கு விஜயம் செய்த நிலையில் அங்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் அமைச்சருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்நிலையில் பிரதமர் மஹிந்தவின் நாகவிகாரை விஜயத்தின்போது அமைச்சர் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வழிபாட்டில் ஈடுபட்டார் பிரதமர்

(யாழ். நிருபர்)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நல்லூர் கந்தசுவாமி ஆலய வழிபாட்டை கைவிட்டு மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் சென்று வழிபட்டுள்ளார்.

நல்லூரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது என வழங்கப்பட்ட தகவலை அடுத்து இந்த மாற்றம் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வருகை தருவார் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

சிறப்பாக இடம்பெற்ற தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலய திருவிழா

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி நேற்று முன்தினம் (19) காலை 7 மணிக்கு கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குருஸ்அடிகளார் தலைமையில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் மற்றும் அருட்தந்தையர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூப பவனியும், அதனைத் தொடர்ந்து ஆசியும் இறை மக்களுக்கு வழங்கப்பட்டது.

குறித்த திருவிழா திருப்பலியில் பல நூற்றுக்கணக்கான மக்கள் மற்றும் கிராம மக்களும் கலந்துகொண்டனர்.

காய்ச்சல், வயிற்றோட்டத்தால் 9 மாத குழந்தை உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் ஏற்பட்ட 9 மாதப் பெண் குழந்தை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது.

நெடுந்தீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமல்ராஜ் டென்ஜான்சிகா என்ற 9 மாத பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

டென்ஜான்சிகாவுக்கு நேற்று முன்தினம் இரவு காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது. நேற்றுக் காலை பெற்றோர் நெடுந்தீவு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு சிகிச்சைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு குழந்தையை மாற்றினர். ஆயினும் குழந்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுவரும் முன்னரே உயிரிழந்தது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார்.

யாழ். தமிழ்ச்சங்கத்தின் முப்பெரும் நிகழ்வுகள்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்திய சங்கப்பேழை நூல் வெளியீடு, உலகத் தாய்மொழிநாள் பேருரை மற்றும் 2019 உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் அதிவிசேட சித்தி பெற்ற வடமாகாண மாணவர்கள் 154 பேருக்கான மதிப்பளிப்பு ஆகிய மூன்று நிகழ்வுகள் நேற்று முன்தினம் (19) சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா கலந்துகொண்டார்.

நிகழ்வில் வரவேற்புரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்செல்வருவி ச.லலீசனும் தமிழ்மொழிநாள் பேருரையை கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் சி. சந்திரசேகரமும் அவருக்கான அறிமுகவுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பொருளாளர் பேராசிரியர் தி.வேல்நம்பியும் சங்கப்பேழை நூல் வெளியீட்டுரையை நூலின் பதிப்பாசிரியர் மோ.துசிகனும் நூலாய்வுரையை பேராதனைப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரனும் ஆற்றினர்.

நன்றியுரையை சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் கு. பாலசண்முகனும் நிகழ்ச்சி முன்னிலைப்படுத்தலை சங்கச் செயலாளர் இ.சர்வேஸ்வரராவும் மேற்கொண்டனர்.

சங்கப்பேழை நூலை தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ்வெளியிட்டுவைக்க,அதன்முதற் பிரதியை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் மாணவ மற்றும் வயங்களின் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், தமிழாசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். கௌரவம் பெற்ற மாணவர்களுக்கு 5000ரூபா பணப்பரிசில், ஐந்து பெறுமதியான புத்தகங்கள் அடங்கிய பொதி மற்றும் சான்றிதழ் என்பன வழங்கப்பட்டன.

யாழ். அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் சிறந்த பெறுபேறு

அண்மையில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றின்படி யாழ். அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தைச் சேர்ந்த 4 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ள நிலையில் மொத்தமாக 6 மாணவர்கள் சித்தியடைந்து வடமராட்சி விகிதாசாரத்தில் பாடசாலை முன்னிலை பெற்றுள்ளது

மாணவர்களான த. தர்மிகன் 167, தீ.மகிஷா 155, இராா.பர்மிகா 155, பா.அபர்னா 153 என்ற அடிப்படையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ள நிலையில், பி.பிரதீபா 141, மு.வர்ஷன் 116 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளனர்.

சித்தி பெற்ற மாணவர்களுடன் அதிபர் கி. சிறிகந்தராசா, வகுப்பாசிரியை அனுசியா பரனிதரன் மற்றும் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களையும் காணலாம்.

திகதி 18.03.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத்
சீட்டிழுப்பு இலக்கம் : 4710
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 24,114,770.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 6 3 5 4 1 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

திகதி 19.03.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத்
சீட்டிழுப்பு இலக்கம் : 4711
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 11,779,940.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 0 9 1 9 5 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,152,653.00

தேசிய லொத்தர் Mega POWER மேகா பவர் மெகா பவர் வேலி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1058
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,049,880.00
அடுத்த கொக் சுப்பர் பரிசு ரூ. 242,613,306.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து S
கூட்டல் இலக்கம் 11
வெற்றி இலக்கங்கள் 05 38 54 56

தேசிய லொத்தர் Mega POWER மேகா பவர் மெகா பவர் வேலி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1059
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,533,820.00
அடுத்த கொக் சுப்பர் பரிசு ரூ. 242,914,102.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து O
கூட்டல் இலக்கம் 12
வெற்றி இலக்கங்கள் 09 20 72 75

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 740
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,596,160.00
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 03 13 69 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,005,479.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 741
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,413,160.00
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 44 48 50 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,249,518.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1225
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,253,580.00
வெற்றி இலக்கங்கள் 9 1 4 6 2 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,671,114.80

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தலைமையகம், 310, ஜாஎல வீதி, ஜாஎல, இலங்கை
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

அதிரடிப்படையினரின் பாதுகாப்புக்கு மத்தியில் அம்பாறையில் எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை

(பாறுக் ஷிஹான்)

நாடுபூராகவும் தட்டுப்பாடாக இருந்த லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் நேற்று முன்தினம் (19) பொலிஸார், விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பிற்கு மத்தியில் அம்பாறை மாவட்ட மக்களுக்கு சீராக வழங்கப்பட்டு வருகின்றது.

இருந்தபோதிலும் நேற்று முன்தினம் (19) இம்மாவட்டத்திலுள்ள நற்பிட்டிமுனை லிட்ரோ எரிவாயு விநியோக நிலைய மொத்த விற்பனை நிலையத்திற்கு எடுத்துவரப்பட்ட சுமார் 1000இற்கும் அதிகமான சிலிண்டர்கள் கடும் நெருக்கடிக்கு மத்தியில் கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, சாய்ந்தமருது, காரைதீவு, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வருகைதந்த பொதுமக்கள் மற்றும் உணவக உரிமையாளர்களுக்கு பொலிஸார், விசேட அதிரடிப்படையினரின் மேற்பார்வையில் வழங்கப்பட்டு வருகின்றன.

குறித்த மொத்த விற்பனை நிலையத்தில் எரிவாயு கொள்வனவு செய்ய வருகைதந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒழுங்கீனமாக நடந்துகொண்டதையடுத்து எரிவாயு நிறுவன அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் இருந்த சுமார் 10இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட அதிரடிப்படையினர் நிலைமையை கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர்.

கடந்த 15 நாட்களுக்கும் மேலாக நாடு பூராகவும் தட்டுப்பாடாக இருந்த எரிவாயு சிலிண்டர்கள் தற்போது நாட்டிலுள்ள களஞ்சியசாலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்ற நிலையில், எரிவாயு விநியோகம் இடம்பெறுவதாக தகவல் பரவியதையடுத்து பொதுமக்கள் அதனை பெற்றுக்கொள்வதற்கு அதிகாலையில் இருந்தே காத்திருந்து எரிவாயு கிடைக்காமை காரணமாக அமைதி இன்மை ஏற்பட்டிருந்தது.

எனினும், எரிவாயு களஞ்சிய பகுதியில் அமைதியின்மை சீர்செய்யப்பட்டு அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் லிட்ரோ எரிவாயு கட்டம் கட்டமாக வழங்கப்பட்டது. இந்த எரிவாயு கொள்வனவில் சிறுவர்கள் பெண்கள் அதிகளவாக வருகைதந்து பெற்றுச்சென்றதை காணமுடிந்தது.

மேலும் எரிவாயுவை கொள்வனவுசெய்ய காத்திருந்த சிலருக்கு அது கிடைக்காமையால் அமைதியின்மையில் ஈடுபட்டுள்ளனர். எனினும், கல்முனை பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமம் பகுதியில் பெரும்போக அறுவடை எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பாதிப்பு

(கின்னியா நிருபர்)

திருகோணமலை - தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பிச்சவெளி பகுதியில் செய்கைபண்ணப்பட்ட பெரும்போக வேளாண்மை அறுவடை தற்போது இடம்பெற்று வருகின்றது.

டீசல் இல்லாததால் வேளாண்மை அறுவடைசெய்ய முடியாமல் அசௌகரியத்துக்குள்ளாவதாகவும் விவசாயிகளே தங்களுடைய வேளாண்மையை அறுவடை செய்ய டீசல் வாங்கிக் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தம்பலகாமம் பிச்சவெளி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சேதனப் பசளையைப் பயன்படுத்தி செய்கைபண்ணப்பட்ட வேளாண்மையே இவ்வாறு அறுவடை செய்யப்படுகின்றது.

சேதனப் பசளையால் விளைச்சல் இல்லை, விளைந்த வேளாண்மையை அறுவடை செய்ய டீசல் இல்லை. இவ்வாறு துன்பப்படுவதாகத் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இப்பகுதியில் சுமார் 610 ஏக்கர் நிலப் பரப்பில் பெரும்போக வேளாண்மை செய்கைபண்ணப்பட்டன. சுமார் 220 விவசாயிகள் இச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். ஏக்கருக்கு 10, 15 பேக் நெல் விளைந்துள்ளது. யூரியா பசளை மூலமாக கடந்த காலங்களில் 40, 45 பேக் விளைச்சல் கிடைத்தது. இம்முறை பாரியளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வங்கியில் கடன்பட்டுத்தான் விவசாயம் செய்தோம்.

நெல்லை சந்தைப்படுத்த முடியாது. வேறு இடங்களிலுள்ள நெல்லை கொண்டுவந்து எங்களுடைய கபடவை நிரப்பிவிட்டார்கள். இம்முறை எதிர்பார்த்த விளைச்சல் இல்லை, டீசல் இல்லை, அறுவடைக் கூலி அதிகம், நாளுக்கு நாள் டீசல் விலையேற்றம் 7,000 ரூபாவுக்கு முன்னர் அறுவடைசெய்த நாங்கள் இப்போது 9000 ரூபா, 10,000 ரூபா கொடுத்து அறுவடை செய்யவேண்டியுள்ளது எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

டீசல் இல்லை போலினில் நிற்கணும், இரவு கண் விழித்து இருந்து டீசல் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதிக விலையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். டீசல் பற்றாக்குறை காரணமாக அறுவடை இயந்திரம் ஊடான தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் வந்த பிறகுதான் கஷ்டம். டீசல் இல்லாமல் அறுவடைசெய்ய முடியாது எனவும் நெல் அறுவடை இயந்திர உரிமையாளர்கள் மேலும் கவலை தெரிவித்தனர்.

சாய்ந்தமருது மல்ஹறு ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில்

இலவச மருத்துவ முகாம்

(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச மருத்துவ முகாம் கடந்த வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது மல்ஹறு ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) இடம்பெற்றது.

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் தவிசாளர் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் நிசான் ஜெமீலின் ஆலோசனைக்கமைவாக "வளமான தேசத்திற்கு ஆரோக்கியமான சமூகம்" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்த இலவச மருத்துவ முகாமின்போது சாய்ந்தமருது மல்ஹறு ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் உடற் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, கண் பரிசோதனை போன்ற மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் எம்.ஜே.இஸட்.எம்.ஜமால்டீன், திட்டப் பணிப்பாளர் டாக்டர் எம்.ஏ.எம்.முனீர், பெஸ்ட் ஒவ் யங் அரச சார்பற்ற நிறுவனத்தின், செயலாளர் ஏ.பூஹாது, டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.எல்.எம்.நஜீம்டீன், உதவி முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.இஸட்.எல்.றியாஸ், நலன்புரி முகாமையாளர் எல்.எம்.அஜ்வத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அம்பாறையில் 2700 மூலிகை மரக்கன்றுகள் நடும் வேலைத்திட்டம் ஆளுநரால் ஆரம்பிப்பு

(பைஷல் இஸ்மாயில்)

ஜனாதிபதியின் செழுமையான தொலை நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் 30 தலைத்தரம் காடுகளை உயர்த்தும் தேசிய கருத்திட்டத்தை உயிர்ப்பிக்கும் நோக்கில் அம்பாறை மாஓயா நில்கல வனப்பாதுகாப்பு பிரதேச றம்புக்கன் ஓயா நீர்த்தேக்க பிரதேசத்தில் 2700 மூலிகை மரக்கன்றுகள் நடும் திட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட இற்றிகழ்வில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர், கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல், இராஜாங்க அமைச்சர் சிறிர ஜயக்கொடியின் கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி இணைப்பு அதிகாரி வைத்தியர் ஏ.சி.டில்சாத், கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் பணிப்பாளர் கலைமாலெப்பை நாசிறான் மற்றும் இராணுவ அதிகாரிகள், பொலிஸார், பழங்குடியினர், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இலங்கையில் அருகிவரும் மூலிகை மரங்களை உருவாக்கி அதன்மூலம் பாரம்பரிய வைத்தியத்திற்கு தேவையான உள்ளூர் மருந்து உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதுடன், பாரம்பரிய வைத்திய முறைகளை செயற்படுத்தும் தொலைநோக்கத்திற்காகவே இத்திட்டம் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாரம்பரிய வைத்திய முறையின் மூலம் இயற்கையோடு ஒன்றித்த வாழ்க்கை முறையினையும், நஞ்சற்ற ஒரு தேசத்தையும், சமுதாயத்தையும் உருவாக்குவதற்காக சிறந்த வேலைத்திட்டங்களை ஜனாதிபதி நடைமுறைப்படுத்தி வருகிறார். ஜனாதிபதியின் அனைத்துத் திட்டங்களையும் உடனுக்குடன் அமுல்படுத்தும் வகையில் கிழக்கு மாகாணம் முன்னின்று செயற்பட்டு வருகின்றது என்றும் இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

திருக்கோவில் பிரதேசத்தில் எரிபொருளுக்காக அரச, தனியார் வாகனங்கள் நீண்டவரிசையில்

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று அதிகாலைவேளை முதல் அரச, தனியார் வாகனங்கள் மிக நீண்ட வரிசையில் எரிபொருள் நிரப்ப தரித்து நிற்பதனை எம்மால் காணமுடிந்தது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அக்கரைப்பற்று தெற்கு பல்நோக்கு கூட்டுறவு சங்க திருக்கோவில், தம்பிலுவில் நிலைய பொது முகாமையாளர் ஆர்.மகேஸ்வரன்.

கையிருப்பிலுள்ள டீசலை வாகனத் தாங்கியின் கொள்ளளவிற்கேற்ப 10,000 ரூபாவுக்கு மாத்திரம் நிரப்ப அனுமதித்துள்ளதாகவும் மேலதிகமான போத்தல், கலன்களில் நிரப்ப அனுமதி கிடையாது என்றும் குறிப்பிட்டார்.

மேலும் கையிருப்பிலுள்ள டீசல் இன்றும் தினம் நிறைவடைவுள்ளதாக தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

கையிருப்பிலுள்ள பெற்றோல் இரண்டு தினங்களுக்கு போதுமானதாக உள்ளதாகவும். பெற்றோல், டீசலை முப்படையினருக்கு அவசிய தேவை கருதி மேலதிக கலன்களில் வழங்க தாம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அம்பாறை மாவட்டத்தில் விவசாய செயற்கை கேள்விக்குறியாகியுள்ளதுடன், விவசாய செய்கை பாதிப்படையும் நிலை காணப்படுகிறது.

பாலமுனை பிரதேசத்தினுள் புகுந்த காட்டு யானைகள்; வீட்டுத்தோட்டப் பயிர்கள் உட்பட உடைமைகள் சேதம்

(பாலமுனை நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பாலமுனை பிரதேசத்தின் மக்கள் குடியிருப்புப் பிரதேசத்தினுள் நேற்று (20) அதிகாலைவேளையில் புகுந்த யானைகள் வீட்டுத் தோட்டத்திலுள்ள தென்னை, மா, பலா, வாழை மற்றும் வீட்டுத்தோட்டப் பயிர்கள் உடைமைகள் என்பன சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் இரவுநேரங்களில் அச்சம் நிலவிவருவதாக பிரதேச மக்கள் தெரிவிக் கின்றனர். இதேவேளை, யானைகளின் அட்டகாசத்தினால் வீட்டு சுற்றுப்புறச் சூழலிலுள்ள பயன்தரும் மரங்கள், பயிர்கள் என்பனவும் சேதமாகியுள்ளன.

அட்டாளைச்சேனை பாலமுனை ஒலுவில் போன்ற வயலை அண்டிய பிரதேசங்களில் வேளாண்மை அறுவடை நிறைவடைந்த நிலையில், குறித்த காலத்தில் காட்டு யானைகள் வருவதாகவும் இக்கரைப்பகுதியில் மக்கள் அன்றாட தேவைகளுக்காக இரவு நேரங்களில் வெளிச்செல்ல முடியாது சிரமப்படுவதுடன், உயிராபத்தை எதிரநோக்கி வருவதாகவும் பிரதேச வாசிகள் சுட்டிகாட்டுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் வயலை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்கள் வேளாண்மை அறுவடை முடிந்த காலப்பகுதியில் இரவு நேரங்களில் வெளிச்செல்ல முடியாமல் அச்சத்துடன் வீட்டில் முடங்கியிருக்க வேண்டிய நிலை தொடராக காணப்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து பொதுமக்களின் உயிர் உடைமைகள் மற்றும் வீட்டுத்தோட்ட வாழ்வாதாரப் பயிர்கள் என்பவற்றை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

பாலமுனை ஹிறாநகருக்கு அண்மையில் காணப்படும் மலைப் பிரதேச காட்டுப்பகுதி மற்றும் ஒலுவில் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையம் போன்ற இடங்களில் வேளாண்மை அறுவடை நிறைவடைந்த காலப்பகுதியில் உணவு உண்ணுவதற்காக வரும் காட்டு யானைகளே இவ்வாறு மக்கள் குடியிருப்பு பிரதேசங்களுக்குள் இரவுநேரங்களில் புகுந்து துவம்சம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மின் கட்டண உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருமலையில் தீப்பந்தம் ஏந்தி ஆர்ப்பாட்டம்

(திருமலை, கிண்ணியா நிருபர்கள்)

மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலையில் தீப்பந்தம் ஏந்தியவாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை - கண்டி வீதி தம்பலகாமம் பிரதேச செயலகத்திற்கு முன்பாக மின்சார பாவனையாளர் சங்கத்தினால் நேற்று முன்தினம் (19) இரவு 7 மணியளவில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் மின் பாவனையாளர்களின் உரிமைக்கு என்ன நடக்கின்றது. அதிகரிக்கவிருக்கும் மின்கட்டண உயர்வினை உடன் நிறுத்து. மின்சாரத்தினை நேர்த்தியாக வழங்கு மற்றும் பல்வேறு பொருட்களுக்கான விலை உயர்வினை கண்காணி என்ற பதாகைகளை ஏந்தி தீப்பந்தம் ஏற்றியவாறு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

மேலும் ஆட்சிசெய்ய தெரியாவிட்டால் வீடு செல்லுங்கள் அல்லது வெளிநாடுகளுக்காவது நாட்டை தாரைவார்த்து நீங்கள் வீடு செல்லுங்கள் அல்லது விலை உயர்வினை கட்டுப்படுத்துங்கள் என்று கோஷங்களை எழுப்பியவாறு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மின் பாவனையாளர் சங்கத்தின் தலைவர் ஐ.ஏ.கனி ரங்கன இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாளுக்கு நாள் விலைவாசிகள் அதிகரித்தவண்ணம் இருக்கும் இவ்வேளையில் மின்சாரக் கட்டணத்தை மேலும் அதிகரிப்பதற்கான முன்மொழிவுகள் முன்மொழியப்பட்டுள்ள நிலையில், மின் பாவனையாளர் சங்கம் என்றவகையில் அதை நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதாகவும் இதன்போது தெரிவித்தார்.

மேலும் அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் மின்சாரக் கட்டணத்தை 15 வீதத்தினால் அதிகரிப்பதாக அறிவித்துள்ள போதிலும் சாதாரண ஒரு கூலித் தொழிலாளியின் மின்கட்டணம் அல்லது ஒரு வர்த்தகரின் மின்கட்டணமானது 300 அல்லது 600 வீதத்திற்கும் மேலாக அதிகரிக்கப்படும் நிலை இதனால் உருவாகும் எனவும் இதற்கப்பால் மின் கட்டணத்தை உயர்த்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் பிரதேசங்கள், கிராமங்களுக்குச் சென்று பாரியளவில் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தயாராக உள்ளதாகவும் இதன்போது தெரிவித்தார்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் தம்பலகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த பெரும்பாலான பொதுமக்கள் தீப்பந்தம் ஏந்தியவாறு நாட்டில் நாளுக்குநாள் அதிகரித்துவரும் விலைவாசியினை கண்டித்து அரசாங்கத்திற்கு எதிராக குறித்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
easttthamilan@gmail.com

போடியார் புலம்பல்!



காணாமல் போனவர்களுக்கு ஒருவருக்கு ஒரு இலட்சம் வழங்க அமைச்சவை அங்கீகாரமாம். அடபாவிகளே தமிழண்ட உயிரின் பெறுமதி அவ்வளவுதானாடா நாசமறுவானுகளே! அது சரி காணாமல் போனவர்கள எங்கடா புதைச்சயல், எந்த குளத்தில முதலைக்கு உடலங்கள கொடுத்தீர்கள், அதுயாச்சிம் ஒள்ளுப்பம் சொல்லுங்கவண்டா.. ? அந்த சனத்திட பாவம்தாண்டா உங்கள ஆட்சிசெய்ய விடாமல் தடுக்குது இன்னும் நீங்க படப்போற பாடு நாங்க பார்க்கத்தான் போறம்!

எரிபொருள் தட்டுப்பாட்டால் திருமலை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

(திருமலை நிருபர்)

திருகோணமலையில் மீனவர்கள் கடற்றொழிலுக்கு செல்வதற்கான போதியளவு டீசல் வழங்கப்படுவதில்லை என குற்றஞ்சுமத்துகின்றனர்.

திருகோணமலை எரிபொருள் நிலையங்களில் பல மணிநேரம் காத்திருந்தும் தமது ஜீவனோபாய தொழிலான மீனவத் தொழிலிலை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் உள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் (19) காலை டீசல் பெறுவதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்து கேன்களில் டீசல் வழங்கமுடியாதென எரிபொருள் நிலைய ஊழியர்களினால் தடைவிதித்ததையடுத்து அங்கு சற்று அமைதியின்மை ஏற்பட்டது.

பின்னர் ஒருவருக்கு 2000 ரூபாவுக்கு மாத்திரம் டீசல் வழங்கப்பட்டதாகவும் அவ்வாறு பெறப்பட்ட டீசல் மூலம் கடலில் எவ்வளவு தூரம்சென்று தமது தொழிலை செய்யமுடியும் என மீனவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமது படகுகளின் அனுமதிப்பத்திரத்தினை காண்பித்தும் தமக்கு போதுமான டீசல் வழங்கப்படவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் விலைவாசிக்கு மத்தியில் தாங்கள் நிவாரணம் கேட்கவில்லை எனவும் தமது ஜீவனோபாய தொழிலை முன்னெடுத்து செல்ல உரிய முறைகள் எரிபொருளினை வழங்க அல்லது படகின் அனுமதிப்பத்திரத்திற்கு அமைவாக மீன்பிடித் துறைமுகங்களில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலாவது டீசல் பெற்றுத்தர அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டு. வாகரையில் கஞ்சா செடி வளர்த்த பெண்ணொருவர் கைது

(மாமாங்கம் நிருபர்)

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள கதிரவெளி பால்சேனையிலுள்ள வீடொன்றில் கஞ்சா செடி வளர்த்துவந்த பெண் ஒருவரை கடந்த வெள்ளிக்கிழமை (18) மாலை கைதுசெய்துள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து குறித்த வீட்டை சம்பவதினமான வெள்ளிக்கிழமை மாலை பொலிஸார் முற்றுகையிட்டனர். இதன்போது வீட்டில் வளர்த்துவந்த 5 அடி உயரமான கஞ்சா செடியை மீட்டதுடன், பெண் ஒருவரை கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாற்றுத்திறனாளிகளின் ஏற்பாட்டில் நமக்காகவும் நம்மவர்களுக்குமான நடைபவனி 100 நாட்கள்

(மண்முனை நிருபர்)

மாற்றுத்திறனாளிகளை பேசுபொருளாக்கும் பெரும் நோக்கோடு நடத்தப்படுகின்ற Tamil Para Sports இந்த முறை மட்டக்களப்பில் ஓகஸ்ட் 20இல் நடக்கவிருக்கின்றது. அதனை முன்னிட்டு நேற்று முன்தினம் (19) மட்டக்களப்பில் நடைபயணம் இடம்பெற்றது.

மாற்றுத்திறனாளிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்தவர்கள் இணைந்து 100 நாட்கள் நடைபெறவுள்ள மனிதநேய நடைபவனியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர்.

DATA Charity அமைப்பின் ஏற்பாட்டில் இந்நடைபவனி மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய சந்தியிலிருந்து ஆரம்பமாகி வெபர் மைதானத்தைச் சென்று நிறைவுபெற்றது.

தாம் நிர்னயிக்கும் தூர இலக்கை அது ஒருநாளைக்கு '10,000' அடிகளாகவோ '5000' அடிகளாகவோ '3000' அடிகளாகவோ இருக்கலாம். அந்த இலக்கை 100 நாட்கள் தொடர்ந்து நடக்கும் ஒரு சவாலான மனிதநேய நடையில் (Charity Walk இல்) DATA Charity கடந்த வருடத்தில் இருந்து நடத்திவருகின்றது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

(காரைதீவு நிருபர்)

2021ஆம் ஆண்டு புலமைமைப்பரிசில் பரீட்சையில் காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் ஆண்கள் பாடசாலையில் 11 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

2021ஆம் ஆண்டு புலமைமைப்பரிசில் பரீட்சையில் காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் ஆண்கள் பாடசாலையில் கல்வி பயிலும் 11 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் கூடிய புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளதுடன், கல்முனை வலய மட்டத்தில் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் முறையே சுரேந்திரகுமார் ஜஸ்விகன் 172, சுபதீபன் லுஜூர்க்ஷன் 170, பிரதீப் கபித்ஷயன் 168, யோகானந் ஷகில்நயன் 167, பார்த்தீபன் லவ்லீன் 164, கமலேஸ்வரன் டோசிதன் 159, இராஜலிங்கம் இந்துஜன் 158, சுபாஸ்குமரன் சுகானுஜன் 158, இளங்கோ திலுக்ஷன் 157, இதயகுமார் எல்லான் 153 மற்றும் ரவிராஜ் புவிக்கிளோர் 150 பாடசாலை மாணவர்களுடன் அதிபர் துரை. யோகநாதன் உதவி அதிபர் கே.நாகரஞ்சனி கற்பித்த ஆசிரியைகளான யோகமலர் தவராசா யோதரானி கனேசலிங்கம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(கல்லடி நிருபர்)

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கல்முனை கல்வி வலயத்திலுள்ள பாண்டிருப்பு மகா விஷ்ணு வித்தியாலயத்திலிருந்து தோற்றியோரில் 4 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளனர்.

இந்நிலையில் புவனேந்திரன் நேகிதன் (172), கமல் கேன்ஷிகா(166), தேவராசன் மோனிஷா (165), சசிகரன் தட்சிகரன்(157) ஆகியோரே சித்திபெற்றவர்களாவர்.

இவர்களை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகத்தினர் பாராட்டிக் கௌரவப்படுத்தியுள்ளனர்.

(கல்லடி நிருபர்)

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின்படி திருக்கோவில் கல்வி வலயத்தில் 133 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதாக திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

இதனடிப்படையில் ஆலையடிவேம்புக் கோட்டத்தில் 67 மாணவர்களும், திருக்கோவில் கோட்டத்தில் 52 மாணவர்களும், பொத்துவில் கோட்டத்தில் 14 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

வலய மட்டத்தில் தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலய மாணவி கோகுலராஜ் திவான்ஜனா 184 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளதோடு, ஆலையடிவேம்புக் கோட்டத்தில் திருவள்ளுவர் வித்தியாலய மாணவி கிருசாந்தன் லயிளாபூரீ 179 புள்ளிகளைப்பெற்று கோட்ட மட்டத்தில் முதலிடத்தினையும், வலய மட்டத்தில் இரண்டாவது இடத்தினையும் பெற்றுள்ளார்.

இந்நிலையில், திருக்கோவில் கல்வி வலயத்தில் 2020ஆம் ஆண்டு 119 மாணவர்கள் சித்திபெற்றிருந்த நிலையில், 2021ஆம் ஆண்டில் 133 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(பாறுக் ஷிஹான்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட கல்முனை அல் - ஸுஹறா வித்தியாலயத்தின் வரலாற்றிலேயே இம்முறை 6 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று பாடசாலைக்கு பெருமை ஈட்டிக்கொடுத்ததோடு, வரலாற்றுச் சாதனையையும் படைத்துள்ளனர்.

இதுவரைகாலமும் இப்பாடசாலையில் 4 மாணவர்கள் மட்டுமே பாடசாலை வரலாற்றில் அதிகூடிய சித்தியடைந்த மாணவர்களாக காணப்பட்டனர்.

இப்பாடசாலைக்கு மாணவர்களின் புதிய அனுமதியின்மை குறைபாடு, கற்றல் செயற்பாடுகளில் மாணவர்களின் ஆர்வமின்மை போன்ற பல காரணங்களினால் மூடுவிழா காணவிருந்த இப்பாடசாலை கடந்த 2020ஆம் ஆண்டு புதிய அதிபராக கடமைபேற்ற எம்.எஸ்.எச்.ஆர்.மஜிதியாவின் ஆளுமையினாலும், திறமையினாலும் பாடசாலை ஆசிரியர்களின் அயராத உழைப்பினாலும், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர்களின் ஒத்துழைப்புகளினாலும் குறுகிய காலத்திற்குள் 6 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்திபெற வைத்து வெற்றிபெற வைத்தமை பாராட்டத்தக்க வரலாற்று நிகழ்வாகும்.

கல்முனை முஸ்லிம் கல்விக் கோட்டத்தில் முன்னணி ஆரம்பக்கல்வி பாடசாலையாக திகழும் இப்பாடசாலையின் அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜிதியாவின் வழிகாட்டலினாலும், பெற்றோர், ஆசிரியர் மாணவர்களின் அயராத முயற்சியினாலும் பெறப்பட்டுள்ள இந்த வெற்றிக்கு காரணமாக அமைந்த அனைவருக்கும் பாடசாலை சமூகத்தினர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

(நூருல் ஹுதா உமர்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் நிந்தவூர் கமு/கமு/ஜேர்மன் நட்புறவு ஆரம்ப பாடசாலை மாணவி என்.செரீனா 161 புள்ளிகளை பெற்று சித்தியடைந்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

இப்பாடசாலையானது நிந்தவூர் கல்விக் கோட்டத்திலுள்ள கஷ்ட பிரதேச பாடசாலையாகும். இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் தூரத்திலிருந்தே வருகை தருவதும் கற்றல் வளங்கள் பற்றாக்குறையும், பிரத்தியேக வகுப்புகள் இல்லாமலே இப் பாடசாலை மாணவி சாதனை படைத்துள்ளார்.

அது மட்டுமல்லாமல் இம்முறை தோற்றிய மாணவர்கள் 87.5% என்ற அடிப்படையில் சித்தி புள்ளியை எய்து மற்றுமொரு சாதனை இப்பாடசாலை அடைந்துள்ளது. இந்த வெற்றிக்கு காரணமாக அமைந்தது பாடசாலையை மிகச் சிறந்த முறையில் வழிநடத்திச் செல்கின்ற அதிபர் எம்.ஐ.எம்.ஹிதாயத்துல்லா மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றார் மாணவர்களுக்கு கல்விச் சமூகம் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றது.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு உள்ளிட்ட மூன்று சட்டமூலங்கள் நடைமுறைக்கு

நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்ட மூன்று சட்டமூலங்களுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தனது கையொப்பத்தையிட்டு நேற்று முன்தினம் (19) சான்றுரைப்படுத்தினார்.

அண்மையில் நிறைவேற்றப்பட்ட தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு வேலையாட்கள் நட்டாடு (திருத்தம்), காணி அபிவிருத்தி (திருத்த) சட்டமூலம் என்பன இவ்வாறு சான்றுரைப்படுத்தப்பட்டு நாட்டின் சட்டக் கட்டமைப்பில் இணைக்கப்பட்டன.

இதற்கமைய இந்தச் சட்டங்கள் 2022ஆம் ஆண்டு 09ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம், 2022ஆம் ஆண்டு 10ஆம் இலக்க வேலையாட்கள் நட்டாடு (திருத்தச்) சட்டம் மற்றும் 2022ஆம் ஆண்டு 11ஆம் இலக்க காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

தனிப்பட்ட தரவைச் செய்முறைப் படுத்துவதனை ஒழுங்குபடுத்துவதற்கும், ஏற்பாடு செய்வதற்கும் தனிப்பட்ட தரவைப் பாதுகாத்தல் தொடர்பாகத் தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளை அடையாளங்காண்பதற்கும் பலப்படுத்துவதற்கும் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையைப் பெயர் குறிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேரிலிளவான கருமங்கள் இதனூடாக ஏற்பாடு செய்யப்படும்.

2022ஆம் ஆண்டு 10ஆம் இலக்க வேலையாட்கள் நட்டாடு (திருத்தச்) சட்டத்தின் ஊடாக 2005ஆம் ஆண்டு இறுதியாக திருத்தப்பட்ட 1934ஆம் ஆண்டு 19ஆம் இலக்க வேலையாட்கள் கட்டளைச் சட்டத்தில்

திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், வேலையிலிருக்கும்போது ஏற்படும் அவசர விபத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட பணியாளருக்கு மரணத்தின்போது அல்லது பூரண அங்கவீனமுறும்போது வழங்கப்படும் ஆக்கக்கூடிய நட்டாட்டுத் தொகையான 5,50,000 ரூபாவை 20,00,000 ரூபாவரை (20 இலட்சம்) அதிகரிப்பது இதனூடாக மேற்கொள்ளப்படும்.

மேலும், தற்போது பணியில் ஏற்படும் விபத்துகளுக்கு மட்டும் இழப்பீடு வழங்குவது, பணியிடத்திற்கு வருகை, புறப்பாடு உள்ளிட்ட விளக்கத்தை விரிவுபடுத்துவது உள்ளிட்ட பல முக்கிய திருத்தங்கள் இதன்மூலம் செய்யப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டு 11ஆம் இலக்க காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தின் ஊடாக "காணி ஆணையாளர்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "காணி ஆணையாளர் தலைமையதிபதி" என்ற சொல்லைப் பயன்படுத்துவதற்கும், மேலதிக காணி ஆணையாளர்கள், பிரதிக் காணி ஆணையாளர்கள், உதவிக் காணி ஆணையாளர்கள் மற்றும் வேறு அலுவலர்களை நியமிப்பதற்கும், பிரதேச செயலாளரின் அங்கீகாரமின்றி பற்றுநிலத்தை ஈடுவைப்பதற்குப் பற்றுநிலத்தின் சொந்தக்காரரை இயலச்செய்தல் மற்றும் அளவையிடப்படாத காணிக்கான அளிப்பொன்றை வழங்குவது என்பன தடைசெய்தல் உள்ளிட்ட திருத்தங்கள் இதில் உள்ளடங்குகின்றன.

குற்றம் இழைத்தவனே பயங்கொள்வான்!

20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தவர்களின் காரணங்களை நம்பவேண்டாம் என ரிஷாட் எம்.பி. தெரிவிப்பு

கொரோனா தொற்றினால் மரணித்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்யவிடாமல் பலாத்காரமாக எரித்ததன் சாபம், அவர்களின் இறுதிக் கடமையான உடல்களை எரிக்க முடியாமல் - அடக்கம் செய்யும் நிலையை இன்று இறைவன் ஏற்படுத்தியுள்ளான் - என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

'மின் துண்டிப்பு' என்ற பெயரில் இந்த சாபம் இன்று அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் ரிஷாத் பதியூதீன் சுட்டிக்காட்டினார்.

மருதமுனை, மருதூர் மௌலானா விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற 'ரிஷாத் பதியூதீன் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின்' பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சஹ்ரான் என்ற கொடூரன் செய்த செயலுக்காக அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை சிறையிடைத்தார்கள். ஆன்மீகத் தலைவர்கள், சட்டத்தரணி ஹிஜாஸ் - நான் உட்பட அசாத் சாலி போன்ற அரசியல்வாதிகளையும் அநியாயமாக சிறையிலடைத்தார்கள்.

ஆனால், இவற்றை நன்கு தெரிந்தும், இந்த ஆட்சியாளர்களை பலப்படுத்த எமது வாக்குகளை பெற்ற முஸ்லிம் எம்.பிக்கள் 20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு கை உயர்த்திய பாவத்தை முஸ்லிம் சமூகம் மிக வேதனையோடு பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஆட்சியாளர்கள் குறித்து மக்கள் மத்தியில் இருக்கும் அச்சம் நீக்கப்பட வேண்டும். அவர்கள் புரியும் அட்டூழியங்கள் தட்டிக் கேட்கப்பட வேண்டும்.

இந்த ஆட்சியாளர்களை எதிர்ப்பது பெரும் ஆபத்தென்றும் இதற்காகத்தான் நாங்கள் கை உயர்த்தினோம் என்றும் யாராவது கூறுவார்களாக இருந்தால் அதனை யாரும் நம்ப வேண்டாம்.

நாம் பயந்த சமூகம் அல்ல. எமது வரலாற்றை சற்று பின்னோக்கிப் பாருங்கள் என்று இளைஞர் சமூகத்திடம் கேட்டுக்கொள்கிறேன். குற்றம் இழைத்தவன்தான் பயங்கொள்வான் என்பதை புரிந்துகொள்ளுங்கள் என்றும் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியூதீன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

விபத்தில் சிறுவன் பலி

நிட்டம்புவ, கொங்கஸ்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற வான விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். வேன் ஒன்று லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் வேனில் பயணித்த ஐந்து வயது சிறுவன் படுகாயமடைந்து வத்துபிட்டிவல வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவன் வேன் சாரதியின் மகன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மண்ணெண்ணெய் பாவனை அதிகரிப்பு

நாட்டில் தற்போது நிலவும் சமையல் எரிவாயுவின் தட்டுப்பாடு காரணமாக நாட்டில் மண்ணெண்ணெய் பாவனை அதிகரித்துள்ளது.

பொதுவாக நாட்டில் நாளாந்த மண்ணெண்ணெய் பாவனை கடந்த காலத்தில் 600 மெற்றிக்தொன்களாகும். ஆனால், தற்போது நாளாந்த பாவனை 850 மெற்றிக் தொன்களாக அதிகரித்துள்ளது.

மண்ணெண்ணெயை விற்பனை செய்யும் எரிபொருள் நிலையங்களுக்கு ஆகக் கூடுதலான வகையில், மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு இல்லை என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் எதிர்வரும் சில தினங்களில் சமையல் எரிவாயுவிற்கானதட்டுப் பாடு முழு அளவில் நிவர்த்திக்கப்படும் என்று லிற்றோ எரிவாயு நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

வடக்கு மக்களின் பாதுகாப்புக்காக நாங்கள் எப்போதும் முன்னிருப்போம்!

நயினாதீவில் பிரதமர் தெரிவிப்பு

வடக்கு மக்களை பாதுகாக்க எங்களின் கடந்த ஆட்சி பகுதியில் நடவடிக்கை எடுத்திருந்தோம். அதேபோன்று, மக்களை பாதுகாத்து இந்த மாகாணத்தை அபிவிருத்திசெய்வதற்கு அரசாங்கம் என்றவகையில் இன்றும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தி சன்னஸ் பத்திரம் வழங்கும் வகையில் யாழ்ப்பாணம் நயினாதீவு ரஜமஹா விகாரையில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்று. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கிலும் தெற்கிலும் பழங்காலத்திலிருந்தே மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்துள்ளனர் என்பதை வரலாற்றுச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த நாட்டில் ஏற்பட்ட பாதகமான நிகழ்வுகளால் 30 வருடங்களுக்கு மேலாக இந்த இடம் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது என்று கூறுவது சரியானது. தென்னிலங்கை மக்கள் வடபகுதிக்கு வருவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அன்றைய காலப்பகுதியில் இலங்கை கடற்படையினர் இந்த ஆலயத்தை பராமரித்து பாதுகாத்து வந்ததோடு, பிக்குகளுக்கு அன்னதானம் வழங்கிய தையும் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

வடக்கு மாகாணத்தை மையமாகக் கொண்ட யுத்தம் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் மக்களையும் அழித்தது. இவ்விகாரையை பராமரிக்க அப்பகுதியில் வாழும் ஏராளமான தமிழர்களும் ஒன்றுதிரண்டு வந்தார்கள்.

மேலும், அவர் சொல்லவேண்டியதை பயப்படாமல் சொல்வதும் அவரிடமிருந்து நான் கண்ட பண்புகளில் ஒன்று. மேலும் இந்தப் பகுதி மீதும் விகாரையின் மீதும் மிகுந்த அன்பு கொண்டவர். அவர் இந்த மக்களையும் விகாரையையும் விட்டு வெளியே வரவே இல்லை. எனக்கும் அரசாங்கத்துக்கும் மிகவும் விசுவாசமாக இருந்தார்.

நயினாதீவு மற்றும் ஏனைய தீவுகளுக்கு செல்லக்கூடிய குறிகட்டுவான் ஜெட்டியை புனரமைத்து. நயினாதீவு விகாரைக்கு வருகை தரும் பக்தர்களுக்கான தங்குமிட வசதிகளை மேலும் மேம்படுத்தவும் நாம் எதிர்பார்க்கிறோம்.

இந்த ஆலயம் புனிதமான இடமாக மாற்றப்பட்டதன் காரணமாகவே இவை அனைத்தும் சாத்தியமானது என்றே கூறவேண்டும். 30 ஆண்டுகால பயங்கர

போருக்குப் பின்னர் இந்த விகாரையை பெரிய அளவில் மேம்படுத்தி பக்தர்கள் வழிபடும் இடமாக மாற்ற நினைத்தோம்.

இதேவேளை, தொடர்ந்தும் நாங்கள் வடக்கு மக்களை பாதுகாத்தோம். ஜனாதிபதியும் எமது அரசாங்கமும் இன்று அந்த மக்களைப் பாதுகாத்து இந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

இல்விகாரைக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் தேவையான வசதிகளை செய்து கொடுத்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. இப்பணிகளை முன்னெடுப்பதில் புத்தசாசன அமைச்சு உட்பட அரச நிறுவனங்களும், இலங்கை கடற்படை மற்றும் இராணுவமும் கணிசமான பங்காற்றியுள்ளன.

இந்த புனித பூமியைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் அரசாங்கம் தன்னால் இயன்ற அனைத்தையும் தொடர்ந்து செய்யும் என்று உறுதியளிக்கிறேன் - என்றார்.

நிகழ்வின் நிறைவில் நயினாதீவிலுள்ள ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலிலும் பிரதமர் வழிபாட்டில் ஈடுபட்டார்.

குற்றம் தவிர்

மோட்டார் சைக்கிள்களை திருடி நபர் கைது

கட்டுநாயக்க

நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் மோட்டார் சைக்கிள்களை திருடிய சம்பவங்களுடன் தொடர்புடைய நபரொருவர் நேற்று முன்தினம் கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலானகொட பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குருநாகல், வெல்வல, பொத்துஹெர, நிட்டம்புவ, வெலிவேரிய, வரக்காபொல, ஜா எல, வெயங்கொடை மற்றும் போலியகொடை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் சந்தேகநபரினால் 14 மோட்டார்சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரினால் திருடப்பட்ட 14 மோட்டார்சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதிகல்ல, பொல்பிதிக்க பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பணத்தை திருடிய இருவர் கைது

மிரிஹான

மிரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவல பிரதேசத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முச்சக்கரவண்டியில் வந்த இளந்தெரியாத நபர்கள் பணியாளர்களை வாள்களால் தாக்கிவிட்டு 2 இலட்சத்து 50 ஆயிரத்து 213 ரூபா பணத்தை திருடிச் சென்ற சம்பவம் தொடர்பில் தேடப்பட்டுவந்த சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன்தினம் மிரிஹான பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 10 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இந்த குற்றச்செயலுக்காக அவர்கள் பயன்படுத்திய முச்சக்கரவண்டி, 04 வாள்கள் மற்றும் திருடப்பட்டதாகக் கருதப்படும் பணத்தில் 10 ஆயிரம் ரூபாவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோரகல்முல்ல மற்றும் நாரஹேன்பிட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 24 மற்றும் 37 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மிரிஹான பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

மோதரை

மோதரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாலகல வீதி பிரதேசத்தில் நேற்று முன்தினம் மோதரை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 11 கிராம் 440 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊல்வெட்டகெய்யாவ பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, மோதரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாலகலக பிரதேசத்தில் நேற்று முன்தினம் மோதரை பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட இன்னுமொரு சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 06 கிராம் 440 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மோதரை பிரதேசத்தைச் சேர்ந்த 33வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை மோதரை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

பேலியாகொடை

பேலியாகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொரண சந்திக்கு அருகில் நேற்று (20) பேலியாகொடை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 310 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார்.

பேலியாகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பியகம வீதி, வீரசிங்க சந்திக்கு அருகில் பேலியகொடை பொலிஸ் அதிகாரி களுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று (20) முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 145 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தெல்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயது டைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொடை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

பாணந்துறை

பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொதரவில பிரதேசத்தில் நேற்று முன்தினம் பாணந்துறை தெற்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வாதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார்.

பாணந்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மீகொடை

மீகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெட்டியாவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய் யப்பட்டுள்ளார்.

ஹெட்டியாவத்த, மீகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மீகொட பொலிஸார் மேலதிக விசாரணைகள் முன்னெடுத்து வருகின்றனர்.

தலங்கம

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுகூத்திபுர பிரதேசத்தில் தலங்கம பொலிஸாருக்கு நேற்று முன்தினம் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய் யப்பட்டுள்ளார்.

பொரளை பிரதேசத்தைச்சேர்ந்த56 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளதுடன், தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நுகேகொடை

நுகேகொடை குற்றத்தடுப்புப் பிரிவு அதி காரிகளினால் நேற்று முன்தினம் மிரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விஜயா மாவத்தை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 230 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு மிரிஹான பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

நுகேகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய் யப்பட்டுள்ளதுடன், மிரிஹான பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் கைது

கொடகவெல

கொடகவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலகபொல பிரதேசத்தில் நேற்று முந்தினம் கொடகவெல பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரி – 56 ரக துப்பாக்கியுடன நபரொருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

பல்லேபெத்த பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய் யப்பட்டுள்ளதுடன், கொடகவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கெக்கிராவ

கெக்கிராவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரந்மலாவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கெக்கிராவ பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய் யப்பட்டுள்ளதுடன் கெக்கிராவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விபசார விடுதி சுற்றிவளைப்பு

கல்கிஸை

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேரம் வீதி, கல்கிஸை பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது அழகுகலை மத்திய நிலையம் என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்டுவந்த விபசார விடுதி சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த விபசார விடுதியை முகாமைத்துவம் செய்த மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியது தொடர்பில் தாய்லேந்தைச் சேர்ந்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

35 மற்றும் 42 வயதுடைய தாய்லாந் தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய் யப்பட்டுள்ளதுடன், கல்கிஸை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உலக செய்திகள்

26 நாட்களை எட்டிய போர்

தலைநகர் கீவ்வை கைப்பற்ற துடிக்கும் ரஷ்யா

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் இன்று 26ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், உக்ரைன் தலைநகரான கீவ்வை கைப்பற்றும் முனைப்பில் ரஷ்யப் படைகள் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள நிலையில், போரில் முதன்முறையாக ஒலியை விட வேகமாக பாயக்கூடிய ஹைபர்சோனிக் ஏவுகணையை வீசி ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில், உக்ரைனின் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள் கிடங்கு அழிக்கப்பட்டுள்ளன.

உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி போர் தொடுத்த ரஷ்யா, தொடர்ந்தும் இன்று 26ஆவது நாளாகவும் தமது தாக்குதலை சற்றும் குறைத்துக்கொள்ளாமல் போரிட்டு வருகிறது. இதுவரை பல முக்கிய நகரங்களில் குடியிருப்புகள், அரச கட்டடங்கள், தொழிற்சாலைகள், வணிக வளாகங்கள் என பல கட்டடங்கள் மீது குண்டுவீசி உக்ரைனையே ரஷ்யா சர்வ நாசமாக்கியுள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் முதல் முறையாக ஹைபர்சோனிக் ஏவுகணையை ஏவி, உக்ரைனின் ஆயுதக் கிடங்கு ஒன்றை அழித்ததாக ரஷ்ய இராணுவம் கூறியிருப்பது பதற்றத்தை அதிகரித்துள்ளது.

இதுகுறித்து ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் இகோர் கொனாஷென்கோவ்வின் தெரிவிக்கையில், "மேற்கு உக்ரைனின் இவானோ-பிரான்கிவ்ஸ்க் பிராந்தியத்திலுள்ள உக்ரைனின் ஆயுத மற்றும் வெடிபொருள் கிடங்கு மீது ரஷ்ய இராணுவம் ஹைபர் சோனிக் ஏவுகணை ஏவி தாக்கி அழித்துள்ளது" என தெரிவித்துள்ளார். கின்சால் என பெயரிடப்பட்டுள்ள அந்த ஹைபர்சோனிக் ஏவுகணை ஒலியை விட 10 மடங்கு வேகத்தில், 1250 மைலுக்கப்பால் உள்ள இலக்கை தாக்கி அழிக்கக்கூடியது. எந்த ஏவுகணை இடைமறிப்பு அமைப்பாலும் இந்த ஏவுகணையை தடுத்துநிறுத்த முடியாது. முதன்முறையாக ரஷ்யா இந்த ஏவுகணையை கடந்த 2016ஆம் ஆண்டில் சிரியா போரில் பயன்படுத்தியுள்ளது. இதுதொடர்பான சில புகைப்படங்களையும் ரஷ்ய இராணுவம் வெளியிட்டுள்ளது.

மிக்31 கே போர் விமானம் மூலம் ஏவப்பட்ட இந்த ஹைபர்சோனிக் ஏவுகணை அணு ஆயுதத்தையும் தாங்கிச் செல்லும் வல்லமை கொண்டது என்பதால் இதை ரஷ்யா, உக்ரைன் மீது பயன்படுத்தியிருப்பது அணு ஆயுதப் போருக்கான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் தாக்குதல் நடத்தப்பட்ட இடம் ருமேனியா எல்லையிலிருந்து சுமார் 50 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள பகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

மற்றொரு ஏவுகணை தாக்குதலில், ஒடேசாவிலுள்ள உக்ரைனின் ரேடியோ உளவு மையமும் அழிக்கப்பட்டுள்ளதாக ரஷ்யா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் மரியுபோலிலுள்ள ஜோப்பாவின் மிகப்பெரிய ஸ்ரீல் தொழிற்சாலையான அசோவ்ஸ்டல் ஆலையையும் ரஷ்ய இராணுவம் குண்டுவீசி நேற்றுமுன்தினம் தகர்த்தது. உக்ரைனின் பொருளாதாரத் தேவைக்கு உதவும் பெரும்பாலான ஆலைகளை ரஷ்யா அழித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போரில் மரியுபோல் நகரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து தொடர்ந்து மக்கள் கார்கள் மூலம் அண்டை மாகாணங்களுக்கு தப்பிச் சென்று வருகின்றனர். மேலும், ஜபோரிஜியாவில் நேற்றுமுன்தினம் நடந்த குண்டுவீச்சில் பொதுமக்கள் 5 பேர் கொல்லப்பட்டதாகவும், 17 பேர் காயமடைந்ததாகவும் அந்நகர துணை மேயர் தெரிவித்துள்ளார். நேற்கு உக்ரைனில் இராணுவ முகாம் நடத்தப்பட்ட தாக்குதலில் 12 பேர் உயிரிழந்துள்ளதாக உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது. ரஷ்யாவின் தாக்குதலால் மனிதாபிமான பாதைகள் வழியாக மக்கள் அண்டை நாடுகளுக்கு தப்பிச் செல்வதும் தடைப்பட்டுள்ளதாக உக்ரைன் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறது.

• ஹைபர்சோனிக் ஏவுகணை தாக்குதல்: ஆயுதம் - வெடிபொருள் கிடங்கு அழிப்பு

• 33 இலட்சம் பேர் அண்டை நாடுகளில் தஞ்சம்: 65 இலட்சம் பேர் உள்நாட்டிலேயே இடம்பெயர்வு

• 115 குழந்தைகள் உட்பட 847 அப்பாவிகள் பலி

• அமைதிக்கான நடவடிக்கையை எடுக்காவிட்டால் ரஷ்யா பேரிழப்பை சந்திக்க நேரிடும் - ஸெலென்ஸ்கி எச்சரிக்கை

மரியுபோல் நகரம் முற்றுகை

நேற்றுமுன்தினம் மரியுபோல் நகரிலுள்ள ஜோப்பாவின் மிகப்பெரிய உருக்காலை ரஷ்ய இராணுவத்தின் தாக்குதலில் கடுமையாகச் சேதமடைந்ததால் மூடப்பட்டுள்ளது.

உக்ரைனின் தென்கிழக்கில் அசோவ் கடற்கரையிலுள்ள மரியுபோல் மிக முதன்மையான துறைமுக நகரமாகும். இந்த நகரை முற்றுகையிட்டுள்ள ரஷ்ய இராணுவத்தினர் அங்கிருந்து மக்களை ரஷ்யப் பகுதிக்கு வெளியேற்றி வருவதாகவும், மின்சாரம், குடிநீர் உள்ளிட்டவை கிடைப்பதைத் தடுப்பதாகவும் நகரவை குற்றஞ்சாட்டியுள்ளது.

இங்குள்ள அசோவ்ஸ்ரீல் ஆலை ஜோப்பாவின் பெரிய உருக்காலைகளில் ஒன்றாகும். இந்த ஆலையின் மீது ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்திய காட்சியை உக்ரைனிய நாடாளுமன்ற உறுப்பினர் லெசியா வாசிலெங்கோ வெளியிட்டுள்ளார்.

தாக்குதலில் அசோவ்ஸ்ரீல் உருக்காலை பெரிதும் சேதமடைந்ததாகவும், அதனால் மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதனால் பொருளாதாரப் பேரிழப்பும், சுற்றுச்சூழல் அழிவும் ஏற்பட்டுள்ளதாகவும் லெசியா வாசிலெங்கோ தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமையன்று எட்டு வழித்தடங்களில் மக்களை வெளியேற்றும் பணி நடைபெற்றதாகவும், மரியுபோல் நகரிலிருந்து நாலாயிரத்துக்கு மேற்பட்டோர் சபோரிசியாவுக்கு வெளியேற்றப்பட்டதாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

மரியுபோல் மக்களை அழைத்துச் செல்ல அனுப்பப்பட்ட பஸ்களை நகருக்குள் செல்ல விடாமல் ரஷ்ய இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியதாகவும் உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

33 இலட்சம் பேர் வெளியேற்றம்: 65 இலட்சம் பேர் பாதிப்பிப்பு

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையால் உக்ரைனை விட்டு 33 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களில் 15 இலட்சம் பேர் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், 65 இலட்சம் பேர் உள்நாட்டிலேயே வாழ்வாதாரம் தேடி இடம்பெயர்ந்துள்ளனர் என ஐ.நா. அகதிகள் முகமை தெரிவித்துள்ளது. அகதிகள் சமமாக 20 இலட்சம் பேர் போலந்தில் தஞ்சமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

847 அப்பாவி மக்கள் பலி

உக்ரைனில் ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதல்களில் 847 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 1,400 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான மக்கள் ரஷ்யாவின் பன்முனை ரொக்கெட் லோஞ்சர்கள், ஏவுகணை, விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உத்தேசமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும், தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகளவில் இருக்கக்கூடும் எனவும் ஆணையம் தெரிவித்துள்ளது.

115 குழந்தைகள் பலி:

உக்ரைன் போரில் இதுவரை 115 குழந்தைகள் உயிரிழந்துள்ளதுடன், 140 குழந்தைகள் காயமடைந்துள்ளனர் என ஐ.நா. தகவல் வெளியிட்டுள்ளது. தொடர் தாக்குதலால் மாற்றுத்திறனாளி குழந்தைகளை அண்டைநாடுகளுக்கு அனுப்பும் பணி பாதிக்கப்பட்டுள்ளது.

போரில் உயிரிழந்த குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் குழந்தைகளை கொண்டுசெல்லும் 109 தொட்டில் வண்டிகள் லிவில் நகர ஆணையர் அலுவலகத்திற்கு வெளியே பொது இடத்தில் வெறுமையாக நிறுத்தப்பட்டிருந்தன.

ஸெலென்ஸ்கி எச்சரிக்கை

படையெடுப்பை நிறுத்தி பேச்சுவார்த்தைகளைத் தொடருமாறு ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

அமைதிக்கான நடவடிக்கையை இப்போது எடுக்காவிட்டால் பல தலைமுறைகளுக்கு ரஷ்யா பெரும் இழப்புகளை சந்திக்க நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால், "ரஷ்யா முன்பு மண்டியிடமாட்டோம்" என்று உறுதியுடன் உக்ரைன் வீரர்கள் ரஷ்யாவின் பெரும் படைகளுடன் யுத்தக்களத்தில் நிற்கின்றனர். இப்போரில் ரஷ்யாவுக்கு எதிர்பாராத பெரும் உயிர்சேதம் ஏற்பட்டிருப்பதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

தலைநகர் கிவ்வைக் கைப்பற்ற வந்த படைகள் முன்னேற முடியாமல் நிறுத்தப்பட்டுள்ளன. இது போருக்கான நேரம் அல்ல, பேச்சுவார்த்தைக்கான நேரம் என்று ஸெலென்ஸ்கி புட்டினுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

வெடிக்காத குண்டுகளை அகற்ற வருடங்களாகும்

"ரஷ்ய இராணுவம் வீசிய ஏராளமான வெடிகுண்டுகள், கண்ணிவெடிகள் இன்னும் வெடிக்காமல், கட்டட இடிபாடுகளிலும் மண்ணிலும் புதைத்துள்ளன. அவற்றை அகற்றுவது மிகக் கடுமையான பணி. வெடிக்காத குண்டுகளை பத்திரமாக அப்புறப்படுத்த மாதங்கள் இல்லை, வருடக்கணக்காகும்" என உக்ரைனின் உள்துறை அமைச்சர் டெனிஸ் மோனாஸ்ஸ்டைர்ஸ்கை தெரிவித்துள்ளார்.

பல தலைமுறைகளை ரஷ்யா இழந்துவிடும்

உக்ரைன் போருக்கு மத்தியில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தலைநகர் மொஸ்கோவில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்று பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுகையில், "உக்ரைன் போருக்கு எதிராக போராட்டம் செய்பவர்களை தேசத் துரோகிகள்" என கடுமையாக விமர்சித்தார்.

இந்தப் பேட்டிக்கு பதிலளித்து உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வெளியிட்ட வீடியோவில், "ரஷ்யா வேண்டுமென்றே ஒரு மிகப்பெரிய மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது. ரஷ்யப் படைகளை ஜனாதிபதி புட்டின் புகழ்கிறார். ஆனால், இங்கு ரஷ்யப் படையினர் 14,000 பேர் உயிரிழந்துள்ளனர். இப்போரால் ரஷ்யா பல தலைமுறைகளை இழந்துவிடும். இதெல்லாம் ரஷ்யாவினால்தான் நிகழ்ந்தது. இனியாவது போரை நிறுத்த பொறுப்பான முறையில் பேச்சு நடத்த வேண்டும். அதற்கான சரியான நேரம் வந்துவிட்டது. அதற்கு புட்டின் முன்வர வேண்டும்" என்றார்.

ரஷ்ய மகசூ எண்ணெய் ஒப்பந்தம் இந்தியா கையெழுத்து

மேற்கத்தேய நாடுகளின் பொருளாதாரத் தடை காரணமாக, இந்தியாவுக்கு குறைந்த விலையில் மகசூ எண்ணெய் விற்க ரஷ்யா முன்வந்துள்ளது. இந்த வாய்ப்பை இந்தியா பயன்படுத்திக்கொள்வதாக அறிவித்தது. இந்நிலையில், ரஷ்யாவின் எண்ணெய் நிறுவனத்திடமிருந்து ஜஇசி நிறுவனம் 30 இலட்சம் பீப்பாய் மகசூ எண்ணெய் வாங்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவத்தில் இணைந்த 98 வயது முதாட்டி

உக்ரைன் இராணுவத்தில் 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்டவர்கள் அனைவரும் இணையலாம் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. இதற்காக, தாய்நாட்டுக்காக பல இளைஞர்கள் இராணுவத்தில் சேர்த்து வருகின்றனர். இந்நிலையில், 98 வயதான உக்ரைன் பாட்டி ரஷ்யாவுக்கு எதிராக போரிட இராணுவத்தில் சேர விருப்பம் தெரிவித்த சம்பவம் வெளியாகியுள்ளது.

ஓல்ஹா டிவெர்டோக்லிபோவா (வயது 98) என்ற மூதாட்டி போர் பிரியர். 2ஆம் உலகப் போரில் பங்கேற்று வெறித்தனமாக சண்டையிட்டவர். ரஷ்யா தனது தாய்நாட்டிற்குள் புகுந்ததும், உக்ரைன் இராணுவத்தில் தன்னை இணைத்துக்கொள்ளுமாறு விண்ணப்பித்துள்ளார். ஆனால், வயது மூப்பு காரணமாக அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாக உக்ரைன் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. ஆனாலும், அந்த மூதாட்டி 2ஆம் உலகப் போரைப் போலவே தனது வாழ்நாளில் மற்றொரு போர் வெற்றியை ருசிப்பார் என வெளியுறவு அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

சீனாவை எச்சரித்த பைடன்

போராால் கடுமையாக பொருளாதாரத் தடையை சந்தித்துள்ள ரஷ்யா தற்போது சீனாவிடம் இராணுவ, பொருளாதார உதவிகளைக் கோரியுள்ளது. இந்நிலையில், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை காணொளி வாயிலாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின்போது, உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவை ஆதரித்தால் விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும் என சீனாவை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ஆனால், இந்த எச்சரிக்கைக்கு சீன தரப்பில் என்ன கூறப்பட்டது என்பது பற்றி தெரிவிக்கப்படவில்லை. அமெரிக்காவின் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி பேசுகையில், "உக்ரைன் விவகாரத்தில் சீனா எடுக்கும் நிலைப்பாட்டின்படி தான் வரலாற்றுப் புத்தகத்தில் அதன் பக்கங்கள் எழுதப்படும். அதை சீனா உணர்ந்துகொள்ள வேண்டும்" - என்றார்.

பெலாரஸ்க்கு அத்தியாவசிய வாகுட்கள் வழங்கும் ரஷ்யா

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்கு பெலாரஸ் ஆதரவு அளித்து வருகிறது. இதனால், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பெலாரஸ் மீதும் பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. இதன் காரணமாக பெலாரஸில் கோதுமை, சமையல் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை நிலவுகிறது. இந்நிலையில், பெலாரஸுக்கு தேவையான அத்தியாவசியபடி பொருட்களை வழங்க ரஷ்யா முடிவு செய்துள்ளது.

பாதாள அறைக்குள் ஓவிய வகுப்பு

வெடிச்சத்தத்துக்கு மத்தியில் அச்சத்துடன் வாழ்ந்துவரும் உக்ரைன் சிறுவர்களுக்கு, போர்ச் சூழலை மறக்க வைத்து புத்துணர்ச்சி ஊட்டும் விதமாக கீஸப் பென் ஒருவர் ஓவிய வகுப்புகளை நடத்தி வருகிறார்.

கியி என்ற அந்த மாணவி, ஓவியக்கலையில் முனைவர் பட்டம் பெறுவதற்காக 3 ஆண்டுகளாக உக்ரைனில் வசித்து வருகிறார்.

போர்ச் சூழலிலும் கீனாவிற்கு செல்ல மறுத்த கியி தான் தங்கியிருந்த வீட்டின் பாதாள அறையில் சிறுவர் சிறுமியருக்கு ஓவியப் பயிற்சி அளித்து வருகிறார்.

ஓயாத வெடிச்சத்தம் மற்றும் சைரன் ஒலைக்கு மத்தியில் சிறுவர்களின் சிரிப்பொலியால் அந்த பாதாள அறை களைகட்டி காணப்படுகிறது.

மற்றுமொரு ரஷ்ய இராணுவ தளபதி பலி

பதில் தாக்குதலில் ரஷ்யாவின் மற்றுமொரு இராணுவ தளபதி கொல்லப்பட்டுள்ளார் என உக்ரைன் தெரிவித்துள்ளது. மரியுபோலில் இடம்பெற்ற தாக்குதலில் ரஷ்யாவின் முதற்தரவரிசை கெப்டன் எண்ட்ரே பாலி (வயது 51) (Andrey Paliy) உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.பி.எல். அணிகளுக்குள் உள்ள முக்கிய பிரச்சினைகள்



(அக்ஷரா)

ஐ.பி.எல். மெகா ஏலத்தில் பலத்த போட்டிகளுக்கு மத்தியில் அதிக தொகை கொடுத்து வீரர்கள் வாங்கப்பட்டார்கள். ஒரு அணியின் நட்சத்திர வீரரை இன்னொரு அணி அதிக தொகை கொடுத்து வாங்கியுள்ளது. உடல் தகுதி இல்லாமையால் சில வீரர்கள் களமிறங்க மாட்டார்கள். புதிய வீரரால் பழைய வீரருக்கு சிக்கல். இவற்றிலிருந்து அந்த அணிகள் எப்படி வெளியேறப் போகின்றன, அவற்றுக்கான தீர்வுகள் என்ன?

சென்னை சுப்பர் கிங்ஸ் – தீபக் சஹர்

2018 முதல் சென்னை அணிக்காக விளையாடிவரும் ராஜஸ்தானைச் சேர்ந்த தீபக் சஹர் அணியின் வெற்றிகளில் முக்கிய பங்கஆற்றினார். இதனால் 14 கோடி என்ற மிகப்பெரிய தொகைக்கு சென்னை அணி நிர்வாகம் அவரை மீண்டும் போட்டி போட்டு வாங்கியது.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக நடந்த தொடரில் துரதிர்ஷ்டவசமாக காயமடைந்த அவர் தற்போது அதிலிருந்து இன்னும் முழுமையாக குணமடையவில்லை. இதன் காரணமாக குறைந்தது பாதி ஐ.பி.எல். தொடரில் அவரால் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது சென்னை அணிக்கு மிகப்பெரிய பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த வருடம் அந்த அணிக்காக விளையாடிய ஷார்துல் தாகூர் இப்போது சென்னை அணியில் இல்லை என்பதால் புதிதாக வாங்கப்பட்ட கிறிஸ் ஜோர்டன், ஆடம் மில்னே ஆகியோரை களமிறக்க வேண்டிய கட்டாயத்துக்கு அந்த அணி தள்ளப்பட்டுள்ளது.

ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் – விராட் கோஹ்லி

ஆர்.சி.பி. அணியில் பினிஷராக செயற்பட்ட ஜூம்பவான் ஏ.பி டிவிலியர்ஸ் இப்போது ஓய்வு பெற்றுள்ளார். இம்முறை தலைவராக அறிவிக்கப்பட்டுள்ள டு பிளேஸிஸ் ஒப்பனிங் வீரர் என்பதால் கடந்த வருடம் ஒப்பனிங்கில் விளையாடிய கோஹ்லி இந்த வருடம் அதே இடத்தில் மீண்டும் விளையாடுவதில் சிக்கல் ஏற்படுட்டுள்ளது.

ஏனெனில் இந்த வருடம் அந்த அணிக்கு ஒப்பனிங்கில் விராட் கோஹ்லி – டு பிளேஸிஸ் ஜோடி களமிறங்கினால் மிடில் ஆர்டர் பலவீனமாகிவிடும். அதற்கு காரணம் அந்த அணியின் மிடில் ஆர்டரில் கிளென் மேக்ஸ்வெல் தவிர வேறு யாரும் தரமானவர்களாக இல்லை. எனவே தொடக்க வீரராக ஏதேனும் ஒரு இளம் வீரருக்கு வாய்ப்பளித்து 3ஆவது இடத்தில் விராட் கோஹ்லி, 4ஆவது இடத்தில் கிளென் மேக்ஸ்வெல் விளையாடுவதே இதற்கான தீர்வாக இருக்கலாம்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் – வெங்கடேஷ் ஐயர்

கடந்த வருடம் இந்தியாவில் நடந்த ஐ.பி.எல். தொடரின் முதல் பகுதியில் திண்டாடிய கொல்கத்தா அணி இரண்டாவது பகுதியில் அடுத்தடுத்து வெற்றிகளைக் குவித்து இறுதிப்போட்டி வரை முன்னேறியது. அதற்கு முக்கிய காரணம் ஓபனிங் வீரராக களமிறங்கிய வெங்கடேஷ் ஐயர் ஒரு ஆல்-ரவுண்டராக அசத்தினார்.

அதன் காரணமாக இந்திய அணியில் விளையாடும் வாய்ப்பை பெற்ற அவர் சமீபத்தில் நடந்த மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக தொடரில் மிடில் வரிசையில் களமிறங்கி ஒரு நல்ல பினிஷராக செயல்பட்டார். அதன் காரணமாக இந்த வருடம் அவரை எந்த இடத்தில் விளையாட வைக்கலாம் என்ற குழப்பம் அந்த அணிக்கு ஏற்பட்டுள்ளது.

மும்பை இந்தியன்ஸ் – வெளிநாட்டு வீரர்கள்

ட்ரெண்ட் போல்ட், குயின்டன் டி காக் போன்ற தரமான வெளிநாட்டு வீரர்களை இந்த வருடம் தவறவிட்ட மும்பை இந்தியன்ஸ் டைமல் மில்ஸ், ரிலே மெரிடித், தேவால்டு ப்ரேவிஸ், டிம் டேவிட், டேனியல் சம்ஸ் என நிறைய வெளிநாட்டு வீரர்களை வாங்கியது. அதிலும் இந்த வருடம் விளையாடமாட்டார் எனத் தெரிந்த பின்பும் கூட இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சரை அந்த அணி நிர்வாகம் வாங்கியது அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது.

மும்பை அணிக்காக விளையாடப் போகும் 4 வெளிநாட்டு வீரர்களில் பொல்லார்ட், டிம் டேவிட் ஆகியோர் முதல் இரண்டு வீரர்களாக தேர்வு செய்யப்படவுள்ளார்கள். இருப்பினும் எஞ்சிய இரண்டு இடத்தில் யாரை தேர்வு செய்வது என்ற குழப்பம் அந்த அணிக்கு ஏற்பட்டுள்ளது.

டெல்லி கேபிட்டல்ஸ் – அன்ரிச் நோர்ட்ஜெ



கடந்த வருடம் நடந்த ரி-20 உலகக்கோப்பையில் காயமடைந்த தென்ஆபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ஆன்ட்ரிச் நோர்ட்ஜெ இன்னும் அதிலிருந்து முழுமையாக குணமடையவில்லை. இதன் காரணமாக இவர் இந்த வருடத்தில் விளையாடுவாரா என்ற சந்தேகம் நிலவி வருகிறது.

கடந்த வருடம் நடந்த தொடரில் 150 கி.மீ.க்கும் மேல் தொடர்ந்து பந்துவீச்சி எதிரணிகளை மிரட்டியதால் மற்றொரு தென்ஆபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ககிஸோ ரபாடாவை கூட தக்கவைக்காத டெல்லி அணி நிர்வாகம் இவரை தக்க வைத்தது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக காயமடைந்த அவருக்கு பதில் யார் விளையாடப் போகிறார் என்ற கேள்வி தற்போது அந்த அணியில் நிலவுகிறது. இப்போதைய நிலைமையில் அவரின் இடத்தை பங்களாதேஷின் முஸ்தபிசுர் ரஹ்மான், தென்ஆபிரிக்காவின் லுங்கி நிகிடி ஆகியோரை வைத்து சமாளிக்கலாம். ஆனாலும் அவரளவுக்கு துல்லியமாகவும் அதிரடி வேகமாகவும் இவர்கள் பந்துவீச மாட்டார்கள் என்பது அந்த அணிக்கு பின்னடைவாகும்.

ஐ.பி.எல். 2022 இன்னும் 05 நாட்கள்

இரு ஆண்டுகள் ஒத்திவைப்பின் பின்னர் ஆசிய கிண்ணம் ஓகஸ்ட் 27 ஆரம்பம்

இந்தாண்டு நடைபெறவுள்ள ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரானது எதிர்வரும் ஓகஸ்ட் 27ஆம் திகதி இலங்கையில் ஆரம்பமாகவுள்ளதாக ஆசிய கிரிக்கெட் சம்மேளனம் நேற்று முன்தினம் அறிவித்தது.

ஆறு அணிகள் பங்கேற்கும் குறித்த ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடருக்கான எஞ்சிய ஒரு அணியை தேர்வு செய்வதற்கான தகுதிகாண் சுற்று ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி ஆரம்பமாகிறது. ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகின்றது. எனினும், கடந்த 2020ஆம் ஆண்டு ஏற்பட்ட கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக தொடர் கைவிடப்பட்டது. தொடர்ந்து 2021ஆம் ஆண்டு நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், அது மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் ஆசிய கிரிக்கெட் சம்மேளனத்தின் வருடாந்த சந்திப்பு இலங்கையில் நேற்று முன்தினம் நடைபெற்றுமுடிந்த நிலையில், ஆசிய கிண்ணத்தை இலங்கையில் நடத்துவதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் பங்கேற்கவுள்ளதுடன், இந்த 5 அணிகளுடன் தகுதிகாண் போட்டியில் வெற்றிபெறும் அணியும் இடம்பெறும்.

அதன்படி, மேற்கு பிராந்தியத்துக்கான தகுதிகாண் போட்டியில் குவைட் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் அணிகளும், கிழக்கு பிராந்தியத்துக்கான தகுதிகாண் போட்டிகளில் சிங்கப்பூர் மற்றும் ஹொங் கொங் அணிகளும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

பொதுநலவாய விளையாட்டு விழாவிற்கு இலங்கை கடற்கரை கரப்பந்து அணிகள் தகுதி

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் நகரில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கான கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்க இலங்கை ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

நீர்கொழும்பு கடற்கரை கரப்பந்தாட்ட அரங்கில் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமை நடைபெற்ற போட்டிகளில், அனைத்து போட்டிகளிலும் வெற்றிபெற்ற இலங்கை ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் இவ்வாறு 2022 பொதுநலவாய விளையாட்டு போட்டிகளுக்கு தகுதிபெற்றுள்ளன.

அஷான் ரஷ்மிக மற்றும் மலிந்த யாப்பா ஆகியோர் இலங்கை ஆடவர் அணியை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், சதுரிக்கா மதுஷானி மற்றும் தீபிகா பண்டார ஆகியோர் இலங்கை மகளிர் அணியை பிரதிநிதித்துவப்படுத்தினர். இலங்கையின் இரு அணிகளும் லீக் போட்டிகள் அனைத்திலும் வெற்றிபெற்றிருந்ததுடன், இறுதிப்போட்டிகளில் இலங்கை ஆடவர் அணி மாலைதீவுகள் அணியையும், இலங்கை மகளிர் அணி சிங்கப்பூர் அணியையும் வீழ்த்தியிருந்தன.

2022ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய விளையாட்டு விழா எதிர்வரும் ஜூலை 28 முதல் ஓகஸ்ட் 8ஆம் திகதிவரை இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

தமிழ்ப் பெண்ணை மணந்தார் மெக்ஸ்வெல்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் நம்பிக்கை சகலதுறை வீரரான க்ளேன் மெக்ஸ்வெல், இந்தியாவின் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட வினி ராமனை கடந்த வெள்ளிக்கிழமை மணந்தார்.

க்ளேன் மெக்ஸ்வெல், அவுஸ்திரேலியாவில் வளர்ந்த தமிழுக்குப் பெண்ணான வினி ராமன் என்பவரை நீண்ட காலமாக காதலித்து வந்தார். இவர்களுக்கு கடந்த 2020ஆம் ஆண்டு இந்திய முறைப்படி நிச்சயதார்த்தம் நடந்தது. அதன்பின்னர் கொரோனா அச்சுறுத்தல், ஊரடங்கு என நெருக்கடியான நிலை தொடர்ந்ததால் அவர்களது திருமணம் தள்ளிப்போனது.

இந்நிலையிலேயே க்ளேன் மெக்ஸ்வெல் தனது நீண்ட நாள் காதலியான வினி ராமனை வெள்ளிக்கிழமை தனிப்பட்ட முறையில் திருமணம் செய்து கொண்டார். இந்த ஜோடி தங்களது திருமண புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளனர். மேலும் "காதல் என்பது நிறைவுக்கான தேடலாகும், உன்னுடன் நான் முழுமையாக உணர்கிறேன்" என்று வினி ராமன் தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் எழுதியுள்ளார்.

ஆஸி. கிரிக்கெட் வீரர் க்ளேன் மெக்ஸ்வெல் ஒரு தமிழ்ப் பெண்ணை மணந்ததால் அவர்களது திருமண அழைப்பிதழ் தமிழில் வெளியானமையும் குறிப்பிடத்தக்கது.

பிளாஸ்டரை வீழ்த்தி சம்பியனானது சம்மாந்துறை வி. கழகம்

(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது கிரிக்கெட் சம்மேளனம் ஒழுங்கு செய்து நடத்திய கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த 32 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்ற 15 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் சாய்ந்தமருது பொலிவேரியன் பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப்போட்டி சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்திற்கும், சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இடம்பெற்றது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சம்மாந்துறை விளையாட்டு கழகம் 15 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்களை இழந்து 151 ஓட்டங்களை பெற்றது. முஹம்மத் இல்மத் 33 பந்துகளில் 65 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்.

பதிலுக்கு 152 ஓட்டங்களை இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டு கழகம் 5 விக்கெட்களை இழந்து 119 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. மின்ஹாஜ் 52 ஓட்டங்களை பெற்றார். இதனடிப்படையில் சம்மாந்துறை வி. கழகம் 32 ஓட்டங்களினால் சம்பியன் பட்டத்தை தனதாக்கியது. இறுதியாட்டத்தின் ஆட்ட நாயகனாகவும், தொடராட்டகாரராகவும் சம்மாந்துறை வி.கழக வீரர் முஹம்மத் இல்மத் தெரிவு செய்யப்பட்டார்.

சாய்ந்தமருது கிரிக்கெட் சம்மேளனத்தின் தவிசாளர் ஹக்கீம் சரிப் தலைமையிலும் தலைவர் ரீ.கே.எம். ஜலீல் மற்றும் செயலாளர் இல்யாஸ் அலீஸ் ஆகியோரின் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்விற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பிரதேச முக்கியஸ்தர் றில்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7